# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 7 சனிக்கிழமை (22-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:169


## வவுனியாவில் நேற்றும் பஸ் தீவைத்து எரிப்பு!

### இரண்டு நாள்களில் 2ஆவது சம்பவம்

வவுனியா,ஜுலை22

வவுனியாவில் நேற்றும் பஸ் ஒன்று தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

வவுனியாவுக்கும் இராஜேந்திரக் குளத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துச் சபையின் பஸ்ஸே நேற்றுக் கொளுத்தப்பட்டது.

நேற்றுக் காலை 9-30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இராஜேந்திரக்குளத்தில் இருந்து வவுனியா நகருக்குச் சென்றுகொண்டிருந்த இந்த பஸ்ஸை இடைமறித்த இருவர் பயணிகளை இறங்குமாறு கோரினர் என்றும் -

அதன் பின்னர் பெற்றோல ஊற்றி பஸ்ஸை எரித்தனா என்றும் - விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

பஸ் முற்றாக எரிந்து நாசமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவுக்கும் - உக்குளாங்குளத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபட்ட பஸ் ஒன்று நேற்று முன்தினம் தீவைத்துக் கொளுத்தப்பட்டது தெரிந்ததே.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாகப் புலிகள் மீது அரசு குற்றம் சாட்டியுள்ளது. (இ-3-4)

## சட்ட நடவடிக்கை எடுக்க ஞானக்கோன் 'நோட்டீஸ்'!

### புலிகளுடன் தொடர்பு இல்லையாம்

கொழும்பு,ஜுலை22

"விடுதலைப் புலிகளின் ஆயுதக் கடத்தலில் நான் ஈடுபட்டதாக வெளியிடப்பட்ட செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை. அந்தச் செய்திகள் தவறானவை என்று மறுப்புச் செய்தி வெளியிடவேண்டும். இல்லையேல் வழக்குத் தொடருவேன்."

மேற்கண்டவாறு தெரிவிக்கும் வழக்குக்கான முன்னறிவித்தல் கடிதம் ஒன்றை கப்டன் சாள்ஸ் ஞானக்கோன் தனது சட்டத்தரணி மூலம் லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கும், ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்துக்கும் அனுப்பியுள்ளார்.

"சிங்கப்பூரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஐ.தே.க. தலைவர் ரணில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகள் முகாமில் உண்ணாவிரதம்

சென்னை,ஜுலை22

தமிழ்நாடு செங்கல்பட்டு அகதி முகாமில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகள்4 பேர் தம்மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கோரி கடந்த 16ஆம் திகதி முதல் காலவரையறையற்ற உண்ணா விரதப் போராட்டம் ஒன்றில் ஈடு பட்டுள்ளனர் என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாலன், முரளிதரன் மற்றும் சிவத்தம்பி, மகேந்திரசிகாமணி ஆகியோரே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

### தேக்க நிலையை நீக்கும் முயற்சியாக

# ஜனாதிபதி நேற்று நடத்திய பேச்சுக்கள் வெற்றி தரவில்லை

## முத்தரப்புச் சந்திப்புக் குறித்தும் இணக்கம் எதுவும் இல்லை

கொழும்பு,ஜுலை22

**இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் தொடர்பாக ஏற்பட்டுள்ள தேக்க நிலையை நீக்கும் முயற்சியாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழ்க் கட்சிகளுடனும், ஐக்கிய தேசியக் கட்சியுடனும் நேற்று நடத்திய பேச்சுக்கள் வெற்றி தரவில்லை.**

**அதேவாறு அரசு - ஐ.தே.க. - தமிழ்க் கட்சிகள் ஆகியன கலந்துகொள்ளும் முத்தரப்புப் பேச்சுவார்த்தை குறித்தும் எவ்வித இணக்கமும் காணப்படவில்லை என்று அறியவந்தது.**

அரசாங்கம் வகுத்துள்ள தீர்வுத் திட்டத்தில் உள்ள மூன்று அம்சங்களைத் திருத்தாவிடில் அதனை ஏற்கப்போவதில்லை என்பதனை முன்னர் நடைபெற்ற பேச்சுக்களின்போது தமிழ்க் கட்சிகள் தெரிவித்திருந்தன.

சம்பந்தப்பட்ட திருத்தங்கள் (ஒற்றையாட்சியை ஒழித்தல், வடக்கு-கிழக்கு இணைப்புக்கு சர்வசன

(12ஆம் பக்கம் பார்க்க)




## வால் நட்சத்திரம்

லூனியா எனும் வால்நட்சத்திரத்தை தற்போது இரவு 8 மணியளவில் வடமத்திய திசையில் 60 பாகையில் காணமுடியும் என இலங்கை பல்கலைக்கழக வான

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்பை ஏற்பதற்கு ஐ.தே.க. மறுப்புத் தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை22

வடக்கு - கிழக்கு நிரந்த இணைப்பை தாங்கள் ஏற்கப் போவதில்லை என்று ஐ.தே.க. நேற்றைய பேச்சில் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாக தமிழ் அரசியல் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

அரசுக்கும், ஐ.தே.கவுக்கும் இடையில் நேற்று நடந்த பேச்சில் இந்தக் கருத்தை ஐ.தே.க. தெரிவித்ததாகவும் -

எனினும் இதில் ஏதாவது திருத்தம் செய்யவேண்டுமானால் அது பற்றிச் செயற்குழுவில் ஆராய்ந்து அடுத்த கட்டப் பேச்சில் தெரிவிப்பதாக ஐ.தே.க. கூறியதாகவும் - மேலும் கூறப்பட்டது.

காணி அதிகாரத்தை பிராந்திய சபைகளிடம் கையளிப்பது தொடர்பான விவகாரத்தையும் உபகுழுவில் ஆராய்ந்து முடிவு செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடரும்

கொழும்பு,ஜுலை22

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்னெடுத்துள்ள பேச்சு முயற்சிகள் தொடரும் என்று கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவந்த நோர்வே அரசு அந்த முயற்சிகளை இடைநிறுத்தியிருப்பதாக வெளிவந்த செய்திகள் குறித்தே அது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. (இ-3)

## தமிழ்க் கட்சிகளின் 3 கோரிக்கைகளையும் ஏற்பதற்குத் தயார் என்கிறார் ஜனாதிபதி

### ஆனால் ஐ.தே.க. இணங்கவேண்டுமாம்

கொழும்பு,ஜுலை22

புதிய அரசமைப்பில் இடம் பெற வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் விடுக்கும் மூன்று விடயங்களையும் அரசமைப்பில் சேர்க்க நான் தயார். ஐ.தே.க. அதற்கு இணங்கவேண்டும்.

இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அலரி மாளிகையில் நேற்று நடந்த பேச்சுவார்த்தையில் பங்குபற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய மூன்று தமிழ்க் கட்சிகளிடமும தமது நிலைப்பாட்டை ஜனாதிபதி வெளியிட்டார்.

கூட்டணிக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறையில் உயிரிழந்த சிப்பாயின் சடலம் கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,ஜுலை22

கொழும்புத்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் இடம்பெற்ற சம்பவமொன்றில் உயிரிழந்த சிப்பாயான பிரியந்த குமாரசிறி (வயது19) என்பவரின் சடலத்தை விசாரணைக்காக கொழும்புக்கு எடுத்துச் செல்ல யாழ். நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார்.

தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்ற தகவலுடன் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருந்த இந்தச் சிப்பாயின் மரணம் தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் விசாரணை இடம்பெற்றது.

இந்தச் சிப்பாயின் சடலத்தை கொழும்பு நகர மரண விசாரணை அதிகாரியைக் கொண்டு மரணவிசாரணையை நடத்துவதற்கும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## இனிமேல் நடைபெறும் பேச்சுகளில் ரணில் கலந்துகொள்ளமாட்டார்?

### ஞானக்கோன் விவகாரம் குறித்து அரசு மீது குற்றச்சாட்டு

கொழும்பு,ஜுலை22

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக எதிர்காலத்தில் இடம்பெறும் பேச்சுக்களில் ஐ. தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளமாட்டார் என ஐ. தே.க. வட்டாரங்களில் நேற்றுப் பேச்சடிபட்டது.

நேற்று மாலை ஜனாதிபதி தலைமையிலான அரசுக் குழுவுக்கும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே. குழுவுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் இறுதியில் இந்தத் தகவலை ரணில் விக்கிரமசிங்க நேரடியாகவே ஜனாதிபதியிடம் தெரிவித்தார் எனச் சொல்லப்படுகிறது.

சிங்கப்பூரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் கடந்த மாதம் 18 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் கப்பல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை டிப்போ ஊழியர் நேற்று திடீர் வேலைநிறுத்தம்

வடமராட்சி,ஜுலை22

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் நேற்று அதிகாலை 5.30 மணிமுதல் 8.30 மணிவரை மூன்று மணிநேரம் திடீர் வேலை நிறுத்தம் ஒன்றில் குதித்தனர்.

யாழ். - பருத்தித்துறை வீதியில் வல்லைப் பாலத்துக்கு அண்மையில் வைத்து நேற்று முன்தினம் முற்பகல் பஸ் சாரதி ஒருவரும் நடத்துநர் ஒருவரும் தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவத்தைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வீடுகளைப் பார்வையிட 7 பேருக்கு பாதுகாப்புத் தரப்பினர் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூலை22

கொழும்புத்துறையில் உள்ள தமது வீடுகளைப் பார்வையிடச் செல்வதற்கு ஏழு பேருக்கு பாதுகாப்புத் தரப்பு அனுமதி வழங்கியுள்ளதாக புளொட் அமைப்பின் யாழ். அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அனுமதிக் கடிதங்களைத தமது அலுவலகத்தில் பெறுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

ஜேசுதாசன் சர்மிலன் (சென். மேரிஸ் வீதி), அருளப்பு சொர்னலியஸ் (ஆனந்தன்வடலி வீதி), வல்லிபுரம் (கொழும்புத்துறை), ஆர்.மேரி யோசவ் (வலன்புரம்), புவனேஸ்வரி இராசையா (சுவாமியார் வீதி), கே. மயில்வாகனம் (சின்னலாங்கண்டு வீதி,அரியாலை), மரியாம்பிள்ளை ஜேசுதாசன் (பாஷையூர்).

(இ-3)

# வாள் வெட்டில் 3 பெண்கள் காயம்

கோப்பாய் இராச வீதிப் பகுதியில் வாள் வெட்டுக்கு இலக்கான மூன்று பெண்கள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஜெயக்குமார்சந்திரவதனி (வயது 25), நடராசா லோஜினி (வயது19), நடராசா மகேஸ்வரி (வயது35) ஆகியோரே இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர்.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு இவர்கள் தங்கியிருந்த இடத்துக்கு வந்த ஆறு இளைஞர்கள் இவர்களை வாளினால் வெட்டிவிட்டுத் தப்பிச்சென்றனர் என்று கூறப்படுகின்றது.

(இ-5-9)

# 7 லட்சம் லீற்றர் ம. எண்ணெய் நேற்றுவரை வழங்கப்பட்டது

## பெற்றோலிய கூ. தாபனம் அறிவிப்பு

கடந்த முதலாம் திகதி தொடக்கம் நேற்றுவரை யாழ். மாவட்டத்தில் 7 லட்சத்து 32 ஆயிரத்து 600 லீற்றர் மண்எண்ணெய் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக வட பிராந்திய பெற்றோலியக்கூட்டுத் தாபன புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

21 ப.நோ.கூ. சங்கங்களுக்கு 5 லட்சத்து 34 ஆயிரத்து 600 லீற்றரும், 17 தனியார் எரிபொருள் முகவர் நிலையங்களுக்கு ஒரு லட்சத்து 98 ஆயிரம் லீற்றரும் விநியோகம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூடுதலாக மண்எண்ணெய் விநியோகம் செய்யப்பட்டபோதிலும் மண்எண்ணெய்க்கு தொடர்ந்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது தெரிந்ததே.

எரிபொருள் முகவர் நிலையங்களுக்கு முன்னால் தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் மண்எண்ணெய் பெறுவதற்காக வரிசையில் காத்திருக்கின்றனர்.

(ஐ-5)


## அதிர்ஷ்டம் பிற்போடப்பட்டுள்ளது

இன்று (22-07-2000) அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த LANCER CAR அதிர்ஷ்ட ரிக்கெற்றுகள் விற்று முடிக்காத காரணத்தினால் 24-08-2000 அன்று 3.30 (ப.நே) மணியளவில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**ரிக்கெற்றுக்களைப் பெற்றுக்கொள்ளவேண்டுமா?**

தொடர்பு கொள்ளுங்கள்:

**ஓடியன் மியூசிக் சென்ரர்**

இல.206, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(76625)


## கலந்துரையாடல்

கலைப்பீட 4ஆம்வருட 'A' பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை தொடர்பான அவசர கலந்துரையாடல் 24-07-2000 திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு O.L.B. மண்டபத்தில் நடைபெறும்.

*– 4ஆம் வருட 'A' பிரிவு பிரதிநிதி*

(C/12286)


## விழாக்காணும் நாயகியைப் பிரார்த்திக்கின்றோம்

இன்று (22-07-2000) சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் ஊரெழு கிழானைப்பதி பர்வதவர்த்தனி அம்பாள் மஹோற்சவம் இனிது நிறைவேற பிரார்த்திக்கின்றோம்.

*ஸ்ரீ விக்கினேஸ்வரா அச்சகம்*

இல.150 , நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

சகல விதமான கணனி அச்சு வேலைகளையும் சிறந்த முறையில் உடனுக்குடன் செய்வித்துக்கொள்ளலாம்.

(76634)



## A/L பொருளியல்

M.ஈஸ்வரதாஸ்

A/L 2001

(தேசிய வருமானம்)

A/L 2002

(கேள்விக்கோட்பாடு)

*EXPRESS (எக்ஸ்பிரஸ்) – இருபாலை*

*பிறைற்றன் கல்வி நிலையம் – உரும்பிராய்*

*அறிவொளி அக்கடமி – கோண்டாவில் சந்தி*

*இளையமதி கல்வி நிறுவனம்– கோண்டாவில் டிப்போ*

**ஆரம்பம்: 22-07-2000**

**நேரம் 3.00**

(76637)



## ராஜா

(யாழ்ப்பாணம்)

பிரபுதேவா, ரோஜா, சரத்குமார், கபாலி மற்றும் பலர் நடிப்பில் இனிய பாடல்கள் நிறைந்த

**இந்து**

புதிய நேரம் 10.30, 2.00

24-07-2000 முதல்

*கண்ணுக்குள் நிலவு*

(C/12268)



## நாகம்ஸ்

(சுன்னாகம்)

*ரஜனி, சௌந்தர்யா, சிவாஜி, ரம்யாகிருஷ்ணன்* நடிப்பில

*படையப்பா*

(ரீல்ஸ்)

காட்சிகள்:- 11.00, 2.30 (புதிய நேரம்)

(C/12232)



- மங்கிடும் கண்களுக்கு பொங்கிடும் பார்வை அளிப்பவர்கள்.
- விழுந்த பற்களுக்கு புதிய பற்கள் பொருத்தவும் மிதந்த பற்களுக்கு 'கிளிப்' போடவும் தன்னிகரில்லாத தனிப்பெரும் ஸ்தாபனம்

## எரிக் கணேஷ்

மூக்குக்கண்ணாடி அகமும், மருந்தகமும்

இல.564,566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பாடசாலை மாணவர்களுக்கு விஷேட கழிவு உண்டு.

**ERIC GANESH**

(Opticians)

66, HOSPITAL ROAD,
JAFFNA.

*கிளை:-* K.K.S ROAD,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

(C/12285)



புத்தாயிரமாம் ஆண்டில் புதுமைப்படைப்புகள் ஏராளம்

ஒவ்வொன்றும் சுவை ததும்பும் விருந்தில் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் தயாரிக்கப்பட்டவை.

அதன் வகைகளாவன:-

நினைத்தாலே நாவூறும்

*சுவை மிகு (F) புரியாணி வகைகள், தெவிட்டாத வகையில் நாவுக்கு இதமான (F) பிறைட் றைஸ் வகைகள், சுவை மிகு நூடில்ஸ் வகைகள் மற்றும் டெவல் (F) பிறைட் வகைகளும் அவற்றுடன் உள்நாட்டு வெளிநாட்டு சூப் வகைகள் அனைத்தையும் அறுசுவையின் ஓர் அங்கமாக இன்று யாழ்நகரில் உடனுக்குடன் செய்துதரும் சுவைப்பிரியர்களின் நண்பன்.*

## சூர்யா சைனீஸ்

சுவைப்பிரியர்களின் சூரிய உதயம் போல் இன்று கஸ்தூரியார் வீதியில் ஒரு சூரிய (சைனீஸ்) உதயம்

உங்கள் விருந்துபசார ஓடர்களை முன் கூட்டியே பதிவு செய்துகொள்ளவும். ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

*சூர்யா சைனீஸ்*

163, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(76635)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சீதப்பிள்ளை தியாகராசா

39/10, கொய்யாத்தோட்டம், புது வீதியைப் பிறப்பிடமாகவும் நவாலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதப்பிள்ளை தியாகராசா நேற்று (21-07-2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னக்குட்டி தியாகராசாவின் (இளைப்பாறிய ஓவசியர், யாழ்.மாநகரசபை) அன்பு மனைவியும் அருணாச்சலம் (கனடா), பாலச்சந்திரன் (கனடா), சிவானந்தன் (கனடா), தில்லைநாயகி (ஜேர்மனி), கமலாம்பிகை (லீலா-கனடா), சிதம்பரநாதன் (தெய்வேந்திரம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கணேஸ்வரியின் அன்பு மாமியாரும் இந்துஜாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-07-2000) சனிக்கிழமை அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்குப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி கொத்துக்கட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.தியாகராசா (கணவர்)
தி.தெய்வேந்திரம் (மகன்)

*கலையரசி வீதி,
நவாலி தெற்கு,
நவாலி.*

(76638)

## எட்வின் அலோசியஸ் மரியாம்பிள்ளை

(உரிமையாளர், சவுண்ட் என்ஜினியர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)

129, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எட்வின் அலோசியஸ் மரியாம்பிள்ளை நேற்று (21-07-2000) வெள்ளிக்கிழமை மகிமைக்குள் பிரவேசித்துவிட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (22-07-2000) சனிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு (புதிய நேரம்) ஆரம்பமாகி பி.ப. 2.00 மணிக்கு பூதவுடல் கொட்டடி சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
போதகர் M.M.இன்பரூபன்
(மருமகன்)

*129, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.*

(76632)

## பெஞ்சமின் அமிர்தநாதர்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பெஞ்சமின் அமிர்தநாதர் நேற்றுமுன்தினம் (20-07-2000) வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் சில்லாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற பெஞ்சமின் - வரோனிக்கா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், யோண்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, யுஸ்ரின் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் எட்விஸ் ஜெயசீலி (பிரான்ஸ்), பெஞ்சமின் ஜெயசீலன் (பிரான்ஸ்), யசிந்தா ஜெயசீலி (ஜேர்மனி), அருட்தந்தை பிரான்சிஸ் ஜெயசீலன் (செ.தா), இன்வென்ரா ஜெயசீலி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அலெக்சாண்டர், கலாநாயகி, அலோசியஸ், பிராங்ளின், கமில்டன் ஆகியோரின் அன்பு மாமனாரும் டெனிஸ், டெல்வின், யூலியஸ், மெலாலினி, ஜெனிபர், டிலோன், ஜெனார்த்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை - றோசமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் ஞானப்பிரகாசம், அருட்சகோதரி றொவுவால்ட் (தி.கு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23-07-2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துவரப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் வவுனியா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்தந்தை ஜெயசீலன்
(செ.தா)

*றொசலின் ஆச்சிரமம்,
மதகுவைத்தகுளம்,
வவுனியா.*

(C/12289)

# OBITUARY

## EDWIN ALOYSIUS MARIAMPILLAI

Proprietor, Sound Engineers Jaffna, beloved son of late Mr.&Mrs. Karthegesu Mariampillai Chellappah, Loving husband of Chandra (nee Ernest), Loving father of Manjula (U.K), Shyamala, Ravi (Canada), Suresh (U.K), Mithran (Australia), Father-in-law of Anton Emmanuel, Pastor M.M. Inparupan, Kohila, Prethisha and Gayathiri, Precious Grand father of Samantha, Christina, Noel, Keturah, Deborah, Rannard, Joshua, Zandra, David, Rachael and Mirakla Found brother of late Mrs. Chellam Segarajasinghe, Late Mrs. Victorene Benjamine, Late Thangamany Varnakulasinghe and Mrs. Mattilda Abraham and brother-in-law of G.K.Abraham entered Glory on 21-07-2000.

Funeral Service at 1.00 p.m. on 22-07-2000 (Saturday). Cortege Leaves residence at 2.00 p.m. (SLT) for burial at Koddady Burial grounds.

**Pastor Inparupan**
(Son-in-law, Informant)

*129, Main Street,
Jaffna.*

(76633)

# தக்கரே கைது செய்யப்படுவது உறுதி என்கிறார் துணை முதல்வர்

## மகாராஷ்டிரா மாநிலம் எங்கும் வன்முறை வெடிக்கலாம்

புதுடில்லி, ஜூலை 22

முஸ்லிம்களின் படுகொலைகள் தொடர்பாக சிவசேனைக் கட்சித் தலைவர் பால் தக்கரே கைது செய்யப்படுவது உறுதி. சட்டத்துக்கு அப்பாற்பட்ட நபர் என்று யாருமே இல்லை.

இவ்வாறு மகாராஷ்டிரா துணை முதல்வர் புஸ்பால் தெரிவித்துள்ளார்.

தக்கரேயை கைது செய்ய மாநிலப் பொலிஸாருக்கு மகாராஷ்டிரா அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான உரிய ஆவணங்கள் கிடைத்ததும் அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார் என்று புஸ்பால் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 92—93 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மும்பாயில் மதக் கலவரங்கள் இடம்பெற்றிருந்தன. அப்போது சிவசேனைக் கட்சித் தலைவர் பால் தக்கரே தனது கட்சிப் பத்திரிகையில் சில கட்டுரைகளை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரைகள் மதக் கலவரங்களைத் தூண்டிவிடுவதாக அமைந்தவை எனத் தெரிவிக்கப்பட்டு இது குறித்து விவாதிப்பதற்காகக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

நீதிபதி கிருஷ்ணா தலைமையிலான அக்குழு வகுப்புவாத கலவரங்களைத் தூண்டிவிட்டவர் பால்தக்கரே என்று குற்றஞ்சாட்டியதுடன் அவர் மீது வழக்குத் தொடருமாறும் அரசுக்கு சிபார்சும் செய்திருந்தது.

இந்தக் குழுவின் அறிக்கை மீது அப்போதைய மகாராஷ்டிரா அரசு நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. அதனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த சிவசேனை பாரதிய ஜனதாக் கூட்டணியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தற்போதுமகாரஷ்டிராவில் இந்திரா காங்கிரஸ் — தேசியவாதக் காங்கிரஸ் கூட்டணி அரசு ஆட்சி செய்கின்றது.

இங்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த விலாஸ் வாக் தேஸ் மோர் முதல்வராக இருக்கின்றார். இவர் கிருஷ்ணா குழு அறிக்கையின் மீது — தக்கரே மீது வழக்குத் தொடர மாநில காவல் துறைக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இதேவேளை—

தம்மீது வழக்குத்தொடர்ந்தால் மகாராஷ்டிரா அரசைக் கலைப்பேன் என தக்கரே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மறுபுறம் தக்கரேயின் எச்சரிக்கைக்கு பணியமாட்டோம் என அரசும்தெரிவித்துள்ளது. இந்த நிலையில் சிவசேனைக் கட்சித் தொண்டர்கள் பல்வேறு இடங்களிலும் கல்வீச்சு மற்றும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தக்கரே கைது செய்யப்பட்டால்மேலும்வன்முறைகள் வெடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-க)

# இலங்கை விவகாரம்: சகல கட்சிகளும் கேட்டாலேயே இந்தியா தலையிட வாய்ப்பு!

சென்னை, ஜூலை 22

அரசியல் கட்சிகள் அனைத்தும் கேட்டுக்கொண்டால் மட்டுமே இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா தலையிடக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் அஜித் பாஞ்சா நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் உணர்வுகளையும் விளங்கிக் கொண்டுள்ளதாகவும் அவர்கள் தங்களுக்குரிய சகல உரிமைகளையும், வாய்ப்புக்களையும் பெறுவதற்கு மேற்கொண்டு வரும் முயற்சிகளை இந்தியா தட்டிக்கழிக்க விரும்பவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (க-7)

# முதியோர் இல்லத்தில் தீ! 14 பேர் உடல் கருகி மரணம்!!

சன்ஜோஸ், ஜூலை 22

தென் அமெரிக்க நாடான கோஸ்டாரிக்காவில் உள்ள திலபேன் நகரில் முதியோர் இல்லம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 14 முதியவர்கள் கருகி இறந்தனர். அங்கு தங்கியிருந்த 17 பேர் காணாமற் போய்விட்டனர்.

நகரில் ஒதுக்குப் புறமான பகுதியில் இந்த இல்லம் அமைந்திருந்தது. நள்ளிரவு நேரத்தில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தபோதே தீப்பற்றியுள்ளது. உறக்கத்தில் இருந்ததால், நான்கு புறமும் தீ சுற்றிப் பரவிய பின்பு தப்ப வழியில்லாத முதியவர்கள் உடல் கருகி இறந்துள்ளனர். (ஐ-ஒ)

# ஆயிரம் பாம்புகளை உணவாக உட்கொண்ட தமிழக வாசி!

சென்னை, ஜூலை 22

ஆயிரம் பாம்புகளை உணவாக உட்கொண்டு சாதனை படைத்துள்ளார் தமிழ்நாடு திருசெங்கோடு அம்மாப்பேட்டையைச் சேர்ந்த ராமலிங்கம்.

பழைய இரும்புப்பொருள்களை விற்பனை செய்வதைத் தொழிலாகக் கொண்ட இவர் பாம்பு பிடிப்பதை பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார்.

தமது சகோதரியின் கணவரிடம் இருந்து பாம்பு பிடிக்கும் வித்தையைக் கற்றுக்கொண்ட இராமலிங்கம் கடந்த 25 வருடங்களாக இந்தத் தொழிலை மேற்கொண்டு வருகிறார்.

பெரும் எண்ணிக்கையான பாம்புகளைப் பிடித்த இவர் அவற்றில் சுமார் ஆயிரம் பாம்புகளைக் கறி வைத்தும், நெருப்பில் வாட்டியும் சாப்பிட்டு வந்ததாகக் கூறியுள்ளார்.

மஞ்சள் சாரையின் இறைச்சியே சுவையானது என்று அவர் கூறுகிறார்.

கை, கால், நரம்புச் சுருக்கம் போன்ற நோய்கள் குணமடைய பாம்பு இறைச்சி நல்லது என்று ஆலோசனை கூறும் இவர் தனது நன்பர்கள், உறவினர்களுக்கு பாம்பு இறைச்சியைக் கொடுத்துள்ளார்.

பாம்புகளில் நூறுக்கு மேற்பட்ட இனங்கள் உள்ளதாகக் கூறும் இவர் கண்ணாடி விரியன் பாம்பைப் பிடிப்பதுதான் கஷ்டமான காரியம் என்கிறார். (ஐ-3)

# ரஷ்யாவிற்குள் ஊடுருவிய செச்சினியத் தீவிரவாதிகளை வான் தாக்குதல்கள் மூலம் அழிக்க முடிவு!

மொஸ்கோ, ஜூலை 22

ரஷ்யாவின் பல நகரங்களிலும் ஊடுருவியுள்ள செச்சினியத் தீவிரவாதிகளைக் கண்டு பிடித்து அழிக்கும் நடவடிக்கையாக வான் தாக்குதல்களை ரஷ்யாவின் விமானப் படை ஆரம்பித்துள்ளது.

கடந்த 48 மணி நேரத்தில் மொஸ்கோவில் அவர்கள் ஊடுருவியுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் பகுதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலில் வெடிமருந்துப் பொருள்கள், 'ரிமோல்ட் கொன்ரோல்' கருவிகள் பெருமளவில் அழிக்கப்பட்டன என ரஷ்யப் பாதுகாப்புத் தரப்பு அறிவித்துள்ளது.

அதேசமயம்— தரைப்படையினர் மேற்கொண்ட தேடுதல்களில் பல தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் ஏனைய நகரங்களில் ஊடுருவியுள்ள செச்சினியத் தீவிரவாதிகளை அழிக்கத் தொடர்ந்து வான்தாக்குதல்கள் நடத்தப் போவதாகவும் பாதுகாப்புத் தரப்பு அறிவித்துள்ளது. (க-3)

## உலக அரங்கில்

# இந்து தெய்வங்களின் படங்கள் அச்சிட்ட பாதணிகள் முடக்கம்!

## ஆட்சேபத்தை அடுத்து நடவடிக்கை

வாஷிங்ரன், ஜூலை 22

இந்து மக்களின் வழிபாட்டுத் தெய்வங்களின் படங்களை பாதணிகளில் அச்சிட்டு அவற்றை உற்பத்தி செய்த அமெரிக்க நிறுவனம் தனது உற்பத்திகளை சந்தையில் இருந்து திரும்பப் பெற்றுள்ளது.

கலிபோர்னியாவில் உள்ள பாதணிஉற்பத்தி நிறுவனமே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

பிள்ளையார், லக்ஷ்மி, பார்வதி ஆகிய தெய்வங்களின் படங்களே பாதணிகளில் அச்சிடப்பட்டிருந்தன. இதற்கு அமெரிக்காவில் உள்ள இந்து மக்கள் கண்டனம் செய்திருந்தனர். தமது வணக்கத்திற்குரிய தெய்வங்கள் மற்றும் தமது சமயத்தை இழிவுபடுத்தும் செயல் இது என அவர்கள் வாதிட்டனர். இதனைத் தொடர்ந்து விற்பனைக்கு விடப்பட்ட அனைத்துப் பாதணிகளும் உற்பத்தி நிறுவனத்தால் மீளப் பெறப்பட்டுள்ளன. (க)

# கலவரத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

இந்தோனேசியாவில் மொலுக்காத் தீவைச் சுற்றிப் போர்க்கப்பல்களை நிறுத்திப் பலத்த கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் இந்தப் பகுதியில் அவசரகாலநிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் 18 மாத காலமாக நடைபெற்று வரும் மதக்கலவரங்களைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மதக்கலவரங்களில் இது வரை 4000 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

# ஐரோப்பாவினுள் சட்டவிரோதமாக நுழைவோரைத் தடுக்க ஏற்பாடு!

## சட்டங்களை இறுக்க ஒன்றியம் ஏற்பாடு

பாரிஸ், ஜூலை 22

ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்குள் சட்டவிரோதமாக நுழைபவர்களைத் தடுக்கும் வகையில் சட்டங்களை இறுக்க அந்த நாடுகள் முடிவு செய்துள்ளன.

இது விடயமாக ஆராய பாரிஸில் உயர்மட்ட மாநாடு ஒன்று நேற்று ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் 30 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

கடந்த மாதம் டிரக் ஒன்றில் அடைத்து கடத்த முயன்ற 54 சீனர்கள் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து— சட்டவிரோதமாக நுழைபவர்களைத் தடுக்க ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தநடவடிக்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டங்கள் தொடர்பாக இந்த மாநாட்டில் ஆராயப்பட்டு வருகின்றது.

அரசியல் தஞ்சம் என்ற போர்வையில் நுழையும் ஆள்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

சட்டவிரோதமாக நுழைபவர்களை ஊக்குவிக்கும் வகையில் செயற்படும் குழுக்களைக் கண்டுபிடித்து அவர்களைத் தண்டிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ரஷ்யாவின் நவீன நீர்மூழ்கிகள் இந்தியாவினால் கொள்வனவு!

புதுடில்லி, ஜூலை 22

இந்தியாவுக்குப் பத்து அதிநவீன நீர்மூழ்கிக் கப்பல்களை ரஷ்யா வழங்கியுள்ளது.

இந்தியாவுக்கும் — ரஷ்யாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் பிரகாரம் ரஷ்யா இந்தக்கப்பல்களை நேற்று முன்தினம் கையளித்துள்ளது.

யுத்தக் கப்பல்களை ஏவுகணை மூலம் அழிக்கக்கூடிய சக்தி கொண்ட இந்தக் கப்பல்கள் இந்தியாவுக்குக் கிடைத்திருப்பது இந்தியாவின் கடற்படைப் பலம் அதிகரித்துள்ளமையைக் காட்டுவதாக விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்டை நாடுகளான பாகிஸ்தான், சீனா ஆகியவற்றில் இருந்து வரும் நெருக்குதல்களைச் சமாளிப்பதற்காக ரஷ்யாவிடம் இந்தியா இந்தக் கப்பல்களைப் பெற்றுள்ளதாகக் கூறப்பட்டது.

தெற்காசியாவின் வல்லரசாக வளர்ந்துவரும் இந்தியாவுக்கு ரஷ்யா மேலும் பல ஆயுத உதவிகளை வழங்க ஒப்பந்தங்கள் செய்துள்ளதாகக் கப்பல் கையளிக்கும் வைபவத்தில் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (க-3)

# 80 கோடி மக்கள் பட்டினியின் பிடியில்!

உலகில் எண்பது கோடி மக்கள் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ. நா வின் உணவு, வேளாண் பிரிவு தெரிவித்துள்ளது.

பசிக்கொடுமையால் அல்லலுறும் இந்த மக்களுக்கு உதவுவதற்கு உலக நாடுகள் முன்வர வேண்டும் என்று அந்தப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதியை உணவு நாளாகப் பிரகடனம் செய்துள்ள அந்தப்பிரிவு அத்தினத்தில் பசிக்கொடுமையால் வாழும் இந்த மக்களுக்கு உதவ உலகம் தயாராக வேண்டும் என்று கோஷம் எழுப்பியுள்ளது.

பசிக்கொடுமை, போசாக்கின்மை ஆகிய காரணங்களால் உலகின் சனத்தொகையில் பத்துச் சதவிதமானவர்கள் கற்கும் திறனை இழந்துள்ளனர்.

இதன் காரணமாக உலகம், உணவு உற்பத்தியில் 12 ஆயிரத்து 800 கோடி டொலரை இழந்துள்ளது என்றும் அந்தப்பிரிவு தெரிவித்துள்ளது. (க-3)

# அரச ஊழியர் சம்பளம் குறித்து சிபார்சு செய்ய ஆணைக்குழு

அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளத் திட்டத்தைத் தயாரித்துச் சிபார்சு செய்வதற்கென ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க இந்த ஆணைக்குழுவை நியமனம் செய்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளத் திட்டங்களையும் கொள்கைகளையும் நிர்ணயித்து ஆலோசனை வழங்குவதற்கென நியமனம் செய்யப்பட்டுள்ள இந்த ஆணைக்குழுவில் 8 பேர் இடம்பெற்றுள்ளனர். (இ-7)

## வலிகாமம் கல்வி வலயத்தில்
# பாலர் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் கிடைக்கும்

சுன்னாகம், ஜூலை 22

வலிகாமம் கல்வி வலயத்தின் கீழுள்ள ஆரம்பப் பாடசாலைகளுக்கு அகதிகளுக்கான ஐ. நா தூதரகத்தின் நுண்கருத் திட்டத்தின் கீழ் மாணவர் மேசைகளும் கதிரைகளும் வழங்கப்படவுள்ளன.

தளபாடப் பற்றாக்குறையுள்ள ஆரம்பப் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென 500 மாணவர் மேசைகளும், அதற்குரிய ஆயிரம் கதிரைகளும் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் ஒரு தொகுதியான 250 ஆரம்பப் பாடசாலை மாணவர் மேசைகளையும், அவற்றுக்கான 500 கதிரைகளையும் சுன்னாகத்தில் உள்ள அரசாங்க மரவேலைப் பயிற்சித் தொழிலகம் செய்து வழங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-27)

## வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி
# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம் ஜூலை 22

பளை, சாவகச்சேரி, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதியில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகள். வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல் நடவடிக்கைகளை அடுத்து இங்குள்ள முன்பள்ளி ஆசிரியைகள் இடம்பெயர்ந்த நிலையில் இருக்கின்றனர்.

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட சிறுபகுதி, பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு போன்ற இடங்களிலுள்ள 87 முன்பள்ளிகள் மூடப்பட்டுள்ளமை தெரிந்ததே. (ஐ-5)

# சைவப்புலவர் பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஜூலை 22

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினால் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட இளஞ்சைவப் புலவர், சைவப் புலவர் பட்டப்பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த வருடம் இளஞ்சைவப்புலவர் பட்டப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 24 பேர் இரண்டாம் பிரிவிலும், 9 பேர் மூன்றாம் பிரிவிலும் சித்தி பெற்றுள்ளனர்.

சைவப்புலவர் பட்டப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 13 பேர் இரண்டாம் பிரிவிலும், 5 பேர் மூன்றாம் பிரிவிலும் சித்தி பெற்றுள்ளனர்.

பட்டப்பரீட்சைகளில் சித்தி பெற்றோர் விவரம் வருமாறு:-

### இளஞ் சைவப் புலவர்

★ இரண்டாம் பிரிவு

க. இராகினி, தி. றூபி, ஐ. சித்திரா, க. தேவகி, சி. சிவறஜனி, கி. சசிகலா, க. கலைவாணி. த. மூதினி; தா. பக்தமீரா, சோ. ஜெயந்தி, ச. தயாநிதி.

சு. மனோரஞ்சனி. தி. வரதவாணி, இ. றமணப்பிரியா, ப. கோமதி, பொ. சந்திரவேல், து. ஜெயதேவன்,

க. குணரத்தினம், சி. முகுந்தன், சி. மதனமோகனராஜ், சி. வசந்தகுமார், வே. கமலேஸ்வரன், நி. பவானந்தசர்மா, நா. கலாதரன்.

★ மூன்றாம் பிரிவு

ப. சுமதி, உ. காஞ்சனா, ச. கலையரசி, ம சுபைதா, த. சுபாஜினி, அ. கருணாகரன், வே. ஜெயகுரு, மா. பாலேந்திரன். அ. இராஜரட்ணம்.

### சைவப்புலவர்

★ இரண்டாம் பிரிவு

நா. ஜெயகௌரி, ந. தயாளினி, ச. நாகேஸ்வரி, ந. லலினா, வி. பராசக்தி, சு. மீனாலோசினி, யோ. யோகரூபி, நா. பன்னீர்ச்செல்வி, செ. இந்திரா, ம. யமுனா, க. வே. செல்வகுமார், பா. சர்வேஸ்வரசர்மா, கு. அரசேஸ்வரன்.

★ மூன்றாம் பிரிவு

ப. ருத்திரதேவி, அ. மனோகரன், கு லலிதா, அ சுப்பிரமணியம், கு. கிருபாலினி.

சித்திபெற்றவர்களுக்கான பட்டச் சான்றிதழ்கள் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் வருடாந்தப் பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும் . எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# லயன்ஸ்கழக பதவியேற்பு வைபவம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் 2000—2001 ஆம் ஆண்டுக்கான புதிய அங்கத்தவர் பதவியேற்பு வைபவமும் லயன் பொ. கமலநாதனுக்கு வலயத் தலைவர் பதவி கிடைத்ததற்கான பாராட்டு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை நாலை 10-30 மணிக்குக் கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் லயன் பொ. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன் டாக்டர் வி. தியாகராஜாவும் அவரது துணைவியாரும் சிறப்பு விருந்தினர்களாக லயன் எஸ். பத்மநாதனும் அவரது துணைவியாரும் லயன் ஆர். செல்வநாதனும் அவரது துணைவியாரும் கலந்துகொள்வர். (க)

# சமய சந்நிதிகளில்

வல்வை வைத்தீஸ்வரன் ஆலய தேவி மஹோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை காலை இரதோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை காலை சமுத்திரத் தீர்த்தமும் இரவு கொடியிறக்கமும் இடம்பெறும். (க)

★ ★ ★

பனிப்புலம் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் இடம்பெறும்.

அடுத்த மாதம் முதலாம் திகதி காலை 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

வருடாந்தம் சம்பில்துறை கடற்கரையில் நடைபெறும் தீர்த்தோற்சவம் தற்போதைய அசாதாரண சூழ்நிலைக்கு ஏற்ப ஆலய முன்றலில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-28)

★ ★ ★

வண்ணை வடமேற்கு ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

பத்து நாள்கள் நடைபெற உள்ள இந்த மஹோற்சவத்தில் எதிர்வரும் முதலாம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (க-10)

★ ★ ★

கல்வியங்காடு : திருவருள்மிகு இலங்கைநாயகிமனோன்மணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

அடுத்த மாதம் முதலாம் திகதி காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-180)

★ ★ ★

தென்புலோலி குரும்பைகட்டி ஞானவைரவர் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும். (க-173)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய வருடாந்த அம்மன் மகோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு கொடியேற்ற வைபவம் இடம்பெறும்.

அடுத்த மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்ப் பவனியும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று பிற்பகல் ஆடிப்பூர திருவிழாவும் நடைபெறவுள்ளது. (க)

# கால்நடை உணவாகும் கீரை

கீரையைப் பயிரிட்ட பல விவசாயிகள் அவற்றை ஆடு மாடுகளுக்குத் தீனியாக்கி வருகின்றனர். கீரையின் விலை வீழ்ச்சியடைந்து சந்தை வாய்ப்பு மிகக்குறைந்துவிட்டதனால் வேறுவழியின்றி விவசாயிகள் இவ்வாறு செய்கின்றனர்.

சிலர் பயிரிட்ட தோட்டங்களில் மாடுகளைக் கட்டி மேயவிடுவதையும் காணக் கூடியதாக உள்ளது. (ஐ-154)

# செய்திக் கொத்து

## மின்சாரம் வழங்கப்படவில்லை

அரியாலை, ஜூலை 22

வலி. தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் சண்டிலிப்பாய் சந்தியில் இருந்து தொட்டிலடிச் சந்தி வரையிலான பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

கடந்த ஒருவருட காலத்துக்கு முன்பே இப் பகுதியில் மின்கம்பங்கள் நடப்பட்டும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என்று இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேசமயம் —

இப்பகுதிக்கு மின்சாரத்தை வழங்குமாறு இங்குள்ள மக்கள் மின்சார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-17)

## இடம்பெயர்ந்தோருக்கு வீடுகள் அமைப்பு

நவாலி, ஜூலை 22

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்துவதற்கென அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் கட்டுடையில் 75 வீடுகளையும் பிப்பிலி மயானத்துக்குச் சமீபமாக 25 வீடுகளையும் அமைத்துள்ளது.

மேலும் இந்நிறுவனம் சாவற்கட்டில் 13 குடும்பங்களுக்கும் சண்டிலிப்பாயில் 12 குடும்பங்களுக்கும் தகரக் கொட்டகைகளையும் வழங்கியுள்ளது. (க-106)

## செயலகத்துக்கு புதிய களஞ்சியம்

வடமராட்சி, ஜூலை 22

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் மந்திகையில் புதிய களஞ்சியம் ஒன்று ஏத்படுத்தப்பட்டுள்ளது.

சமநல சேவைகள் திணைக்களத்தின் களஞ்சியமாக ஏற்கனவேஇருந்து வந்த மந்திகையில் உள்ள களஞ்சியத்தை புனர்வாழ்வுப் பகுதியினர் அண்மையில் பொறுப்பேற்றுள்ளனர். (க-173)

## வீதி திருத்தம்

குப்பிளான் — ஏழாலை வீதியின் திருத்தவேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

நீண்ட காலமாக கற்கள் பறிக்கப்பட்ட நிலையிலும் திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக காணப்பட்ட இந்த வீதி தற்போது திருத்தப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. (ச-133)

## மாடுகள் திருட்டு

நெல்லியடி, ஜூலை 22

இரவுவேளை, ஆலயக் குருக்கள் ஒருவரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கு கட்டிநின்ற சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான 4 மாட்டுக் கன்றுகளை அவிழ்த்துச் சென்றுள்ளனர்,

இத் திருட்டுச் சம்பவம் கடந்த திங்கள் இரவு கப்புதூ கரம்பன் என்ற இடத்தில் சின்னத்தம்பி-ரஞ்சன் ஐயா வீட்டில் இடம்பெற்றது.

இச் சம்பவம் குறித்து அப்பகுதி கிராம சேவை அலுவலரிடம் முறையிடப்பட்டுள்ளது. (க-109)

## முறைசாராக் கல்வி

வடமராட்சி, ஜூலை 22

முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் தலையலங்காரக்கலை தொழில் திறன் பயிற்சி அடுத்த மாதம் 2 ஆம் திகதி முதல் புலோலிமெதடிஸ்த மிசன் வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மூன்று மாதகால பயிற்சி நெறியில் பங்கு பற்ற விரும்புவோர் வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-173)

## வடிகால்கள் துப்புரவு

குருநகர், ஜூலை 22

குருநகர் பகுதியில் மக்கள் மீளவும் குடியமர்ந்துள்ள பகுதியில் உள்ள வடிகால்கள் யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினரால் தற்போது துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதியின் முன்னுள்ள மத்திய கிழக்கு வீதியில் குவிந்திருந்த குப்பைகளும் யாழ் மாநகரசபையினால் அகற்றப்பட்டுள்ளன. (க-51)

## 11 பாடசாலைகள் இயங்குகின்றன

தென்மராட்சி கல்வி வலயத்தில் கொடிகாமம் கோட்டத்தைச் சேர்ந்த 11 பாடசாலைகள் தற்பொழுது அந்தந்த இடங்களிலேயே இயங்கி வருகின்றன.

வரணி மகாவித்தியாலயம், விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம், இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாலயம், மிருசுவில் அ.த.க. பாடசாலை, எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை, குடமியன் அ.த.க. பாடசாலை, கரம்பைக்குறுச்சி அ.த.க பாடசாலை வரணிவடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம், கெற்பலி அ.த.க பாடசாலை, வரணி வடக்கு அ.த.க பாடசாலை, கரம்பை அமெரிக்கன்மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய 11 பாடசாலைகளுமே தற்பொழுது இயங்கி வருகின்றன. (க-133)

## இடம்பெயர்ந்தவர்கள் சொந்த இடங்களுக்கு

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, ஈவினை ஆகிய பகுதிகளில் இருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குச் சென்ற மக்கள் தற்போது மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி வருகின்றனர். (க-133)

## அன்பளிப்பு

காரைநகர், ஜூலை 22

வெளிநாடுகளில் வசிக்கும், காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்கள் மேற்படி வித்தியாலயத்திற்கு புதிய மணி ஒன்றினை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்த மணி வித்தியாலயத்தில் நிறுவப்பட்டு தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (க-73)

**உதயன்**

## சுண்டெலிக்குச் சீவன் போவது...

குடாநாட்டின் பிரதான ஆஸ்பத்திரியான போதனா வைத்தியசாலையில் நோயாளருக்குச் சத்திரசிகிச்சை செய்யமுடியாத இக்கட்டான நிலைமை தோன்றும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

சத்திரசிகிச்சைக்குரிய உபகரணத் தட்டுப்பாடு மற்றும் தேவையான வசதிகள் இல்லாமை, டாக்டர்கள் பற்றாக்குறை என்ற வழமையான காரணங்கள் இம்முறை இல்லை. முற்றிலும் வேறுவகைக் காரணத்தினால் சத்திரசிகிச்சைகள் தடைப்படும் என வைத்திய வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் டாக்டர்களில் 22 பேர் அவர்களது பதவி உயர்வுக்காக, சிங்கள வாய்மொழி மூலப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும். அதன் பொருட்டு அவர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பிட்ட பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்திபெற்றாலேயே அவர்கள் பதவியுயர்வுக்குத் தகுதி பெறுவர்.

தனிப்பட்ட ரீதியில், சம்பந்தப்பட்ட டாக்டர்கள் வாய்மொழி மூலப் பரீட்சைக்குத் தோற்றாவிடில் அவர்களின் தொழில் முன்னேற்றம் மிகவும் பாதிப்புறும். ஆகையால் அவர்கள் இப்பரீட்சையைத் தட்டிக் கழிப்பதோ அல்லது அசட்டை செய்வதோ தமக்குத் தாமே கேடு தேடுவதாகும். ஆகையால் அவர்களைக் கொழும்புக்குச் செல்லாதீர்கள்; பரீட்சைக்குத் தோற்றாதீர்கள் என்று தடுப்பது நியாயமற்றது.

அதேவேளை 22 டாக்டர்களும் ஒரேவேளையில் பரீட்சைக்குச் சென்றால் நோயாளர்கள் சத்திர சிகிச்சை வசதியின்றிப் பாதிக்கப்படுவர். சாதாரண சத்திரசிகிச்சைகளைக் கூட உரிய வேளையில் செய்யத் தவறினால் அது அவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் பாதிப்பை ஏற்படுத்தி சில மாத இடைவெளியின் பின்னர் பக்க விளைவுகளை உண்டாக்கலாம்.

இந்தப் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கு வழியில்லாமல் இல்லை. சிங்கள வாய்மொழி மூலப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடத்தினால் இரண்டு பாதிப்புகளுமே இல்லாமற் போய்விடும். டாக்டர்கள், நோயாளர்கள் ஆகிய இரண்டு சாராருக்கும் நன்மை பயக்கும்.

22 டாக்டர்களும் பரீட்சைக்காக இங்கிருந்து கொழும்பு செல்வதற்குப் பதிலாக - அவர்களை அங்கு வருமாறு அழைப்பதற்குப் பதிலாக - பரீட்சை அதிகாரி ஒருவர் இங்கு வந்து பரீட்சையை நடத்தலாம். இவ்வாறு செய்வதால் எவருக்கும் நட்டமில்லை; அரசாங்கத்துக்கும் எவ்வித கௌரவக் குறைவும் உண்டாகாது.

இத்தனைக்கும், 1990ஆம் ஆண்டு தொடக்கம் டாக்டர்களின் பதவி உயர்வுக்கான சிங்கள வாய்மொழிமூலப் பரீட்சை யாழ்ப்பாணத்திலே நடத்தப்பட்டு வந்தது. இம்முறை மட்டும் கொழும்புக்கு வருமாறு ஒரு புதிய ஏற்பாடு. பரீட்சை நடத்துபவர் யாழ்ப்பாணம் வந்து போகும் சிரமத்தை மனதிற் கொண்டே இப்படி ஒரு மாற்றம் என்றால், அது கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

வாய்மொழி மூலப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் சுகாதாரப் பகுதியினருக்கு விடுத்த கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்காகப் பயனற்றுப் போய்விட்டன.

கொழும்பில் உள்ள அதிகாரிகளின் அழுங்குத்தனமான இந்தப் போக்கு, வீம்புத்தனமான ஏற்பாடு மக்களுக்கு - நோயாளர்களுக்கு - வேண்டாத கஷ்டங்களைத் தரும். சுண்டெலிக்குச் சீவன் போவது பூனைக்கு விளையாட்டு என்பதனை நிரூபிக்கும் விதத்தில் தமிழ் மக்களின் விடயங்களில் கொழும்பு அதிகாரிகள் நடந்து கொள்கின்றார்கள். குறிப்பிட்ட பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு அழுத்தம் கொடுக்க உள்ளூர் அரசியல்வாதிகளால் முடியாதா?

# திரிபோஷா வழங்கும் திட்டத்தில் யாழ்ப்பாண மக்கள் புறக்கணிப்பா?

யாழ். குடாநாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் போஷாக்கு நிலை குறைந்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படும் இவ்வேளையில் இவர்களுக்கு கிடைக்கக்கூடிய போஷாக்கு நிறைந்த உணவினை வழங்குவதில் சில அரச நிறுவனங்கள் பின்னடித்து வருகின்றன.

சுகாதாரத் திணைக்களத்தினால் கர்ப்பிணிகள், குழந்தைகள் மற்றும் பாலூட்டும் தாய்மார் போன்றோரின் போஷாக்கினை மேம்படுத்தும் நோக்குடன் திரிபோஷா என்னும் சத்துணவு மா கடந்த காலங்களில் வழங்கப்பட்டு வந்தது.

யுத்தம், போக்குவரத்துப் பிரச்சினை போன்ற பல காரணங்களி

**செய்திமடல்**

னால் திரிபோஷாவினை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவருவது தற்பொழுது அடியோடு நிறுத்தப்பட்டு விட்டது.

1996ஆம் ஆண்டுக்குப் பின் கடந்த வருடம் ஒரு தடவை மட்டுமே கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு திரிபோஷா எடுத்துவரப்பட்டதாகத் தெரியவருகிறது.

இரண்டாயிரம் பொதிகளைக் கொண்ட 60 ஆயிரம் பைக்கெற்றுகளே இவ்வாறு கொண்டுவரப்பட்டு ஒரு தடவை மட்டுமே விநியோகிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக திரிபோஷாவினை கொழும்பிலிருந்து கொண்டு வரமுடியாமலிருப்பதாக யாழ்ப்பாணத்திலுள்ள சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்துக்குத் தேவையான பொருள்கள் கப்பல்கள் மூலம் எடுத்துவரப்படும் பொழுது திரிபோஷாவை மட்டும் ஏன் எடுத்துவர முடியவில்லை என்று வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட பொழுது திரிபோஷாவினை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவருவதற்கு கப்பல் கட்டணமாக ஒரு மாதத்துக்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவு செய்ய வேண்டியுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு எமது திணைக்களத்திடம் இல்லை என்று அவர்கள் கையை விரித்தனர்.

"உங்கள் திணைக்களத்திடம் இதற்கான நிதி ஒதுக்கீடு இல்லாது விட்டால் சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களிடம் இதற்கான உதவியைக் கேட்கலாமே?" என்று அவர்களிடம் கேட்டபொழுது - "கப்பல் கட்டணத்துக்கான நிதி கிடைத்தாலும் கப்பலில் இட ஒதுக்கீடு செய்வதற்கு சிரமப்படவேண்டும். திரிபோஷா இல்லாதுவிட்டால் மாற்று உணவு ஒன்றினை இங்கு தயாரித்து வழங்கலாம்" என்றும் பதிலளித்தனர்.

### மாற்று உணவு

மாற்று உணவு தொடர்பான ஏற்பாடுகள் எதனையும் கடந்த நான்கு வருடமாகச் செய்யாத இவர்கள் இனி மேலும் எப்படிச் செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியும் என்று உள்ளூர் தொண்டர் நிறுவனமொன்றின் பிரதிநிதி ஒருவர் கேள்வி எழுப்பினார்.

திரிபோஷாவினை யாழ்ப்பாணம் கொண்டுவரும் பொறுப்பு சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளையே சார்ந்தது. இவர்களின் அசமந்தப் போக்கினாலே திரிபோஷாவை இங்கு எடுத்துவர முடியாதுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

யுத்தம் - இடப்பெயர்வு - வருமானமின்மை போன்ற பல இன்னோரன்ன காரணங்களினால் ஏழை மக்களின் வாழ்க்கைத்தரம் குறைந்துள்ளதுடன் அவர்களின் போஷாக்கு நிலையும் கேள்விக்குறியாகியுள்ளது.

இந்தக் கேள்விக்குறிக்கு முற்றுப்புள்ளி போடமுடியாது; இவர்களின் துன்பதுயரங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அவர்களுக்குக் கிடைக்கக் கூடியவற்றை கிடைக்கச் செய்யாமலிருப்பது நியாயமாகுமா?

மக்களுக்கு உதவக்கூடிய திட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியது அரச திணைக்களத் தலைவர்களின் கடமையாகும். இந்தப் பொறுப்பினை எவரும் தட்டிக் கழித்துவிடக் கூடாது. மக்களுக்கு உதவும் திட்டங்களை இங்கு நடைமுறைப்படுத்துவதற்கு உள்ள தடைகள் குறித்து வெளிக்கொணர வேண்டியதும் திணைக்களத் தலைவர்களின் பொறுப்பேயாகும். அவ்வாறு பிரச்சினைகள் வெளிவரும் போதுதான் அதற்கான தீர்வும் உருவாக முடியும்.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் இடம்பெயர்ந்த நிலையில் அகதி முகாம்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

இவர்களில் குழந்தைகள், சிறுவர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் எனப் பலரின் போஷாக்கு நிலையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பகுதியினரே தெரிவித்துள்ளனர்.

நாளாந்தம் ஒரு மனிதனுக்கு கிடைக்கக்கூடிய கலோரி உணவைக் கூடப் பெறமுடியாத நிலையில் இவர்கள் இருக்கின்றனர். இந்நிலையில் திரிபோஷா போன்ற சத்துணவுகள் ஓரளவுக்கேனும் இவர்களின் போஷாக்கு நிலைக்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### எடை குறைந்த சிறுவர்

அகதி முகாம்களில் இருப்பவர்கள் 6 மாதம் தொடக்கம் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் 34 வீதமான சிறுவர்கள் எடை குறைந்தவர்களாக உள்ளனர் என்றும் 39 வீதமான பெண்கள் இரத்தச்சோகையினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும் மருத்துவ ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலை நீடிக்குமானால் எமது எதிர்காலச் சமுதாயம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்படும் என்று இந்த முகாம்கள் தொடர்பாக ஆய்வுகள் நடத்தி வரும் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தடைப்பட்டுள்ள திரிபோஷா வழங்கும் திட்டம் தென்பகுதியில் உள்ள கிராமங்கள் தோறும் தொடர்ந்து அமுல் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் எம்மைப் பொறுத்தவரையில் இந்தச் சிறிய விடயத்திலும் அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன்தான் செயற்படுகிறதோ என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

### அரச அதிபரிடம் முறைப்பாடு

திரிபோஷா திட்டம் கைவிடப்பட்டது குறித்து யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் யாழ். அரச அதிபரை நேரில் சந்தித்து தமது விசனத்தை தெரிவித்தனர்.

இந்தவிடயம தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் இதனைத் தனக்கு தெரிவிக்கவில்லை என்று கூறிய அரச அதிபர் திரிபோஷாவை கொண்டுவருவதற்கு கப்பல் கட்டணம் மட்டும்தான் தடையாக இருந்தால் அதனைத் தன்னால் நிவர்த்தி செய்யமுடியும் என்றும் அவர் இந்தச் சந்திப்பில் உறு

**கேசரி**

தியளித்தார்.

கடந்த வருடம் ஒரு தடவை மட்டும் அரச அதிபரின் உதவியுடன் கொழும்பிலிருந்து திரிபோஷா எடுத்துவரப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அக்கறை செலுத்தவேண்டிய அதிகாரிகளின் அசமந்தப் போக்கினாலும் அக்கறையற்ற செயற்பாட்டினாலும்தான் திரிபோஷா திட்டத்தை இங்கு தொடரமுடியாத நிலையேற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் சேவையாற்றுவதற்கு பல சர்வதேசத் தொண்டர் நிறுவனங்கள் ஆயிரக்கணக்கான லட்சம் ரூபாய்களை செலவு செய்து வருகின்றன.

இந்த நிறுவனங்களின் உதவியுடனாவது திரிபோஷா திட்டத்தினை மீண்டும் அமுல் செய்து தங்களின் வயிற்றில் பால் வார்ப்பார்களா? என்று சோமாலியாவில் உள்ளவர்களின் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளவர்கள் என்று கருதக்கூடிய மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

வடக்கின் மீள்குடியமர்வு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை (RRAN), வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி அமைச்சு போன்ற அரச நிறுவனங்களும் இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும். ★

### தமிழில் கணனியியல் குறித்த

# தமிழ் இணையம் – 2000 மாநாடு சிங்கப்பூரில் இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,ஜூலை22

'தமிழ் இணையம் 2000' என்ற பெயரில் கணனியியல் தமிழ் மொழியின் பங்கும், வளர்ச்சியும் குறித்த சர்வதேச மாநாடு சிங்கப்பூரில் இன்று முதல் திங்கட்கிழமை வரை மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

'எதிர்கால நுண்ணலை உலகை தமிழ் மொழிமூலம் அடைவது' என்பதே இந்த மாநாட்டின் தொனிப்பொருளும் இலக்காகவும் அமையும்.

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மனி உட்பட பலநாடுகளில் இருந்தும் தமிழ் மொழி ஆர்வலர்களும் கணனித் தொழில்நுட்பவியலாளர்களும் பல்துறை வல்லுநர்களும் கல்விமான்களும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு கணனி மற்றும் இணையத்தில் தமிழின் வளர்ச்சி குறித்து ஆய்வுரைகள் நிகழ்த்துகிறார்கள். அத்துடன் ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

ஐம்பதுக்கும் மேற்பட்ட கல்வியியலாளர்கள், தொழில்சார் நிபுணர்கள் கலந்துகொள்ளும் இந்த மாநாட்டில் இலங்கையிலிருந்து அறுவர் அழைக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த வீ.கே. ஏரம்பமூர்த்தி, "மொழித்திறன் வளர்ச்சி; எழுத்து வடிவ மேம்பாடு" என்ற தலைப்பிலும் -

திருநெல்வேலியைச் சேர்ந்த ச.ஆ.கோபாலமூர்த்தி, "தமிழ் மொழியின் தரத்தையும் ஆற்றல்களையும் மேம்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள்" என்னும் தலைப்பிலும் -

மட்டக்களப்பைச் சேர்ந்த சி. தங்கவேல், "தமிழ் எழுத்துக்களில் ஆங்கில ஒலிகளைப் புகுத்துதல்" என்ற தலைப்பிலும் -

கொழும்பு சட்டக் கல்லூரியைச் சேர்ந்த திருமதி கமலா நாகேந்திரா, "யாழ். தமிழர் வழக்காற்றுமுறைச் சட்டங்களும் தமிழ் இணையமும்" என்னும் தலைப்பிலும் -

கொழும்பு சட்டக்கல்லூரியைச் சேர்ந்த சுவர்ணராஜா நிலக்ஷன், "இணையத்தில் தமிழ் ஆவணக் காப்பகம்" என்ற தலைப்பிலும் -

மட்டக்களப்பு, கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சஞ்சீவி சிவகுமார், "தமிழில் புள்ளி விவரவியல் தொகுதிகளின் தயாரிப்பும் பயன்பாடும்" என்ற தலைப்பிலும் -

ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் இணையம் 2000 மாநாட்டை முதலில் இலங்கையில் (கொழும்பில்) நடத்துவதற்கே திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் நாட்டுச் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு சிங்கப்பூரில் நடத்துவதற்கு முடிவாகியது.

(அ-ஒ)

**நாளை**

**ஆடி 8**

**ஞாயிற்றுக்கிழமை**

*திதி:* ஸப்தமி
பின் இரவு 12.58 வரை.
*நட்சத்திரம்* : ரேவதி
முன் இரவு 11.03 வரை.
*சுபநேரம்* : 9.02 - 10.32
*ராகுகாலம்* : 4.32 - 6.02
இவை பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி

**உதய வாக்கு**

தனிமனிதனுடைய அல்லது நாட்டினுடைய வளர்ச்சிக்குத் திருப்தியின்மையே முதற்படியாகும்.

*- ஆஸ்கார் ஒயில்ட் -*

### ஜி.சீ.ஈ. உயர்தர வர்த்தகப பிரிவுக்கான கருத்தரங்கு

ஓகஸ்ட் மாதம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உதவியுடன் இலவசக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் காலை 9 மணிமுதல் 10.30 மணி வரை வணிகக்கல்வி தொடர்பாகவும் 10.30 மணிமுதல் 12 மணிவரை கணக்கீடு தொடர்பாகவும் 12 மணி முதல் 1.30 மணிவரை பொருளியல் தொடர்பாகவும் கருத்துரை வழங்கப்படும். மானிப்பாய் வட்டம், இணுவில் மற்றும் சாவகச்சேரி லயன்ஸ் கழகங்கள் இணைந்து இக்கருத்தரங்கை நடத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளன. (க)

### தவறவிட்ட அ. அட்டைகள்

நெல்லியடிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சில விசேட அடையாள அட்டைகள் நெல்லியடி வணிகர் மன்ற அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மீசாலை வடக்கைச் சேர்ந்த சண்முகநாதன் ஞானச்சந்திரன், சாவகச்சேரி தனங்களப்பு வீதியைச் சேர்ந்த பூபாலசிங்கம் ரஞ்சினி ஆகியோரது அடையாள அட்டைகளே உள்ளன. அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

மந்திகைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த யேசுதாஸன் பபீலன் என்பவரது விசேட அடையாள அட்டை மந்திகை ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-117)

### ரெலிக்கொம் சேவை நிலையம்

பொதுமக்களுக்கு அவசர சேவைகளுக்கு தொலைபேசி அழைப்புக்களை வழங்க ரெலிக்கொம் நிறுவனம் சேவை நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

யாழ். ப.நோ.கூ. சங்கத்தின் கட்டடத்தில் இயங்கிவரும் அந்த நிறுவனத்தின் பிராந்திய அலுவலகத்தில் இந்த நிலையம் இயங்குகின்றது.

காலை 9 மணிமுதல் 5 மணிவரை இந்த நிலையம் இயங்கும். (ஐ-5)

### நாட்டுக்கூத்து மேடையேற்றம்

நெடுந்தீவு கலாசார சபை எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை 'ஆட்டுவணிகன்' நாட்டுக்கூத்தை மகாவித்தியாலய திறந்த வெளியரங்கில் மேடையேற்ற உள்ளது.(ஐ-111)

# இந்த வார இராசி பலன்

**22-07-2000 இலிருந்து 28-07-2000 வரை**

| | | | |
|---|---|---|---|
| சந். | சனி | வி | செ புத. ரா |
| | இராசிச்சக்கரம் | | சூ வெ |
| | | | |
| கே | | | |

*மாற்றம்:- 22.07.2000 இல் உத்தரட்டாதி மீனம் இராசியில் சந்திரன் நிற்கும்.*

*25.07.2000 இல் கடகம் இராசியில் புதன் மாறும்.*

*23.07.2000 இல் கடகம் இராசியில் செவ்வாய் மாறும்.*

*அரசியல் பேச்சுக்கள் தொடர்ந்தபடி இருக்கும். யார், எதை விட்டுக்கொடுப்பது என்ற நிலை ஏற்படும். இந்தியா கடும் போக்குடன் நிர்ப்பந்தம் மற்றும் மறைமுக அழுத்தங்களைக் கொடுக்கும். மக்கள் யுத்தநிலை மாறி சமாதானம் வர வேண்டும் என வேண்டிக் கொள்வர். இந்தியாவில் வடபகுதியில் பதற்ற நிலை ஏற்பட இடமுண்டு. உள்நாட்டில் பலவிதப் பிரச்சினைகளை அயல்நாடுகள் ஏற்படுத்த முயலலாம். மேற்கு நாடுகள் கிழக்குநாடுகளில் புதிய பொருளாதார அழுத்தங்களைக் கொடுக்க இடமுண்டு எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

## ஜோதிட சஞ்சீவி

## மேடம்

நாட்டில் யுத்தம் தொடருமானால்அழிவுகள்தொடராமல் விடுமா? கஷ்டங்கள் மலியாமல் விடுமா? சட்டங்கள் பல போடுவதனால் என்ன பயன் எனச்சிந்திக்கிறீர்களா? அதற்காக மனக்கொதிப்பு ஏற்படலாமா? தொழில் ஸ்தானத்தில் ஓய்வின்றி பிரயாசைப்பட்டபடி இருப்பீர்கள். குடும்பத்தில் கருத்து வேற்றுமை வரலாம். சகோதரங்களுக்காக அலைய இடம் உண்டு. வீடு, வாகனம் சம்பந்தமான பிரச்சினைகள் வர இடமுண்டு. தலைநோ, நரம்புச் சோர்வு, கண்எரிவு, கைகால் சோர்வு, பல் சம்பந்தமான பிரச்சினைகள் வர இடமுண்டு. வியாபாரத்துறை, உலோகத்துறை, எண்ணெய்த்துறை, கமிஷன்துறை போன்றவை தொடர்பானவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும். ஏழரைச் சனீஸ்வரனின் தாக்கம் இருப்பதனால் நிதானமாக இருக்கவும். திடீரெனக் கஷ்ட, நஷ்டங்கள் வந்து பகைமை வரும் காலமாகும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, புதன்,வெள்ளி.*

## இடபம்

இடம்பெயர்ந்தோருக்குத்தான் வீட்டுக்கஷ்டம் தெரியும். என்றாலும் அதற்காக மற்றவர்களுக்கு கஷ்டம் கொடுத்து சண்டித்தனம் காட்டும் பண்பற்ற செயல் மாறவேண்டும் எனச் சிந்திப்பதில் தவறில்லை. உங்கள் தொழில் ஸ்தானத்தில் பொறுப்பற்ற சிலரால் வேதனைகள் வரத்தான் செய்யும். எதிர்பாராத மாற்றங்கள் வந்து திசை திருப்பலாம். நெஞ்சுப் படபடப்பு, குளிர் விறைப்பு, சலவருத்தங்கள், வாய்வுத் தொல்லைகள் என்பன வரலாம். மருந்துத்துறை, பாதுகாப்புத்துறை, விவசாயத்துறை, சட்டத்துறை, இசை,கலைத்துறை போன்ற துறைகள் தொடர்பானவர்களுக்கு நல்ல இலாபங்கள் கிடைக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,ஞாயிறு, புதன்,வெள்ளி.*

## மிதுனம்

அவசரப்பட்டு எதைத்தான் செய்வது? உங்களைச் சந்திக்கவே முடியாமல் உள்ளது என்று சிலர் கூறுவர். நாலுபேருடன் மனம் விட்டு நாலு விசயங்களைப் பேசினால் தானே மனம் ஆறுதல் அடையும்? தொழில் ஸ்தானத்தில் அங்குமிங்கும் சென்று வருவதை சந்தேகக் கண்கொண்டு சிலர் பார்ப்பார்கள். எதற்கும் நிதானமாகச் செயற்படுங்கள். பழைமைகளைப்பேசி, புதுமைகளை மறக்கக்கூடாது எனச்சிந்தித்துச் செயற்படுவீர்கள. நரம்புப்பிடிப்பு, வயிற்றுக் குழப்பங்கள், சளித் தொல்லை என்பன கொடுக்கும். அரசியல் துறை, சட்டத்துறை, கோவில்துறை, வியாபாரத்துறை போன்றவை தொடர்பானவர்களுக்கு மாற்றங்களும், இலாபங்களும் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,ஞாயிறு, புதன்,வெள்ளி.*

## கடகம்

எல்லோருக்கும் எல்லா விஷயங்களும் விளங்கும் என்பதல்ல; அவரவர் கல்வி, அறிவு, ஆற்றலின் தன்மைகளைப் பொறுத்தே எதுவும் விளங்குகின்றது. எனவே திடீர் திடீரென வரும் எண்ணக் கருத்துக்களால் உங்கள் தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் வந்தபடி இருக்கும். அரச அதிகாரிகளால் மற்றும் பொதுத்தொண்டு செய்பவர்களின் உதவிகள் வரும். குடும்ப சுகமும் பூர்வீகத் தொடர்பானவர்களின் உதவிகளும் கிடைக்கும். சகோதரர்களின் பிரிவு ஏக்கத்தைக் கொடுக்கலாம். உடற்சோர்வு, பல் வருத்தம், தலையிடி, சலவருத்தம் என்பன வருத்தலாம். இசைத்துறை, செய்தித்துறை, போக்குவரத்துத் துறை, சட்டத்துறை, வியாபாரத் துறை போன்றவை தொடர்பானவர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் அதிகரிக்க இடம் உண்டு.

*அதிர்ஷ்டநாள்:- சனி,ஞாயிறு, புதன்,வெள்ளி.*

## சிங்கம்

ஆண்டவன் தகுதியற்றவர்களிடம் கூரிய அறிவு, ஆற்றலைக் கொடுப்பவரல்லர். ஆனால் உங்கள் தகுதியறிந்து ஆண்டவன் உங்களுக்கு படிப்படியாகக் கிடைக்க வேண்டியதைக் கொடுத்தபடி இருப்பார். உங்களுக்குத் துரோகம் செய்பவர்கள் எவராக இருந்தாலும் தாம் செய்யும் தவறுகளுக்குப் பின்னர் நிச்சயம் வருந்துவார்கள். நீங்கள் அமைதியாக இருந்து தெய்வத்திடம் பாரத்தைக் கொடுங்கள். உடல் நிலையைக் கவனித்துக் கொள்ளுங்கள். ஓய்வு முக்கியமாகும். தூர இடங்களின் செய்திகள் ஓரளவு மன ஆறுதலைக் கொடுக்கும். சட்டத்துறை, வியாபாரத்துறை. ஆலயவேலைகள், குருத்துறை போன்ற துறைகள் தொடர்பானவர்களுக்கு மாற்றங்களும், நன்மைகளும் ஏற்படப் பலன்கள் உண்டு.

*அதிர்ஷ்டநாள்:- சனி,புதன், வெள்ளி.*

## கன்னி

எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகி வரும் எனக்கு சிலர் மனவேதனைகளை அடிக்கடி தருகிறார்கள் எனச் சிந்தித்தபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் சிலர்வேண்டாததைச் சொல்லி மனவேதனைகளைத் தருவார்கள். குடும்பத்தவர்களில் ஒரு சிலருக்கு சுபமங்களப் பேச்சுக்கள் நடக்க நல்ல காலமாகும். சகோதரர் மூலமோ அல்லது பெற்றோர் வழியிலிருந்தோ நன்மைகள் கிடைக்கும். வாய்வுத்தொல்லை, கால் - கைப் பிடிப்பு, நெஞ்சுப் படபடப்பு என்பன வரும்.சட்டத்துறை, இசைத் துறை, உணவுத்துறை, வாகனத் துறை தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்

*அதிர்ஷ்டநாள்:- சனி,புதன், வெள்ளி.*

## துலாம்

ஒருவரின் ஊக்கம், விடாமுயற்சிக்கு உறுதுணையாக இருப்பீர்கள். இல்லாததை உள்ளதாகவும் உள்ளதை இல்லாததாகவும் சிலர் உங்களிடம் சொல்லி திசை திருப்பப் பார்ப்பார்கள். எனவே நீங்கள் தொழில ஸ்தானத்தில் நிதானமாக இருக்கவேண்டும். எதிர்ப்பாளர்கள் உதவி செய்வார்கள். தூர இடங்களிலிருந்து நற்செய்திகள் வரும். தலையிடி, கைகால் சோர்வு, உடல் அசதி, வயிற்றுநோ என்பன கொடுக்கும். தொழில் நுட்பத்துறை, ஆசிரியத் துறை, வியாபாரத்துறை, கமிஷன் துறையினர்களுக்கு நல்ல வருமானம் அதிகரிக்க இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:- சனி,புதன், வெள்ளி.*

## விருச்சிகம்

தனிமனிதர்கள் வாழ்க்கையோ அன்று ஒரு நாட்டின் கொள்கைகளோ ஆணிவேர் இல்லாத மரங்கள் போல இருந்தால் எப்படி இருக்கும்? தொழில் ஸ்தானத்தில் எப்படி இருக்கும்? தொழில் ஸ்தானத்தில் பிரச்சினைகள் வரவரப் பெரிதாகிச் சஞ்சலத்தைக் கொடுக்கும். அயலவர்களுடன் போட்டி போடுவீர்கள். இடமாற்றங்களால் ஓரளவு மனநிம்மதி வர இடமுண்டு. தொழில் ஸ்தானத்தில் பொருள் வரவு அதிகரிக்கும். உங்கள் உறுதி, கண்டிப்பான செயற்பாடுகளால் சிலர் பதற்றப்படுவர். குடும்பத்தினர்களுக்கு தலைக்கு மேல் பொறுப்பு அதிகரித்தபடி இருக்கும். கிருமித்தாக்கம், தொண்டையில் வலி, நெஞ்சுப் புகைச்சல், கைகால் உளைவு என்பன கொடுக்க இடமுண்டு. நிலம், விவசாயத்துறை, சட்டத்துறை, இசைத்துறை, வாகனத்துறை போன்றவை தொடர்பானவர்கள் இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:-புதன்,வெள்ளி.*

## தனுசு

பயப்பாடுகளும் சந்தேகமும் மனிதர்களுக்குப் பொல்லாத வருத்தம்தான். என்ன செய்வது? மனதில் எதையும் வையாது உடனுக்குடன் வெளிப்படுத்திவிடும் உங்களுக்குத் தொழில்ஸ்தானத்தில் எதிர்ப்புக்கள் வந்தபடி இருக்கும் காலமாகும். புத்திசாலித்தனமாக நடவுங்கள். எல்லா இடங்களிலும் ஏட்டிக்குப் போட்டிகள் தான். கண்டபடி பிறரை விமர்சிக்காதீர்கள். அதனால் பகைமைதான் ஏற்பட்டபடி இருக்கும். பழிக்குப்பழி பாராட்டுவதனால் எந்தப் பிரச்சினையும் தீராது. வயிற்றுநோ, வாய்வு வருத்தம், கைகால் சோர்வு என்பன வரலாம். குரு, நீதி, வர்த்தகத்துறை போன்றவை தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு,புதன், வெள்ளி.*

## மகரம்

ஒருவருக்கு அல்லது ஒரு நாட்டுக்கு அழிவு, இழப்புக்கள் வரும் பொழுது அவருக்கு அல்லது அந்த நாட்டுக்கு நல்ல கொள்கைகள் தோன்றும் எனச் சிந்திக்கிறீர்களா? உங்கள் தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் இருக்கச் செய்யும். ஆயினும் ஒரு சிலரின் ஆதரவு இருக்கும். எதிர்ப்பாலாருடன் அன்பாக, பண்பாக நடந்து கொள்ளுங்கள்.அல்லது மனம் நோகும் வசனங்களைக் கேட்க நேரிடும். கலகம் பிறந்து நியாயம் பிறக்கும் காலமாகும். புதிய நண்பர்களால் கஷ்டங்கள் வரலாம். குடும்பத்தினர்களுக்கு நன்மைகள் கிடைக்கும். கைகால்பிடிப்பு,வாய்வுத்தொல்லை, கையில் அல்லது முகத்தில் காயங்கள் சிலருக்கு ஏற்படலாம். அரசியல், வியாபாரம், சமயம், ஆசிரியத் துறை போன்ற துறைகள் தொடர்பானவர்கள் பல நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு*

## கும்பம்

நாம் நடந்து வந்த பாதை எமது சரித்திரங்களைச் சொல்லும். அதில் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. குறைவு, நிறைவு கலந்ததே வாழ்க்கை. அதற்காக நாம் கலங்கக்கூடாது. சரித்திரம் படைத்தவர்கள் எல்லோரும் பிழைவிடாதவர்களல்லர். அதைச் சொல்பவர்களும் நிறைவானவர்களல்லர் என்பதை உங்கள் தொழில் ஸ்தானத்தில் காண்பீர்கள். காசு இழப்பு அல்லது களவு போகலாம். எதிர்ப்பாலார்களுக்குக் குடும்பத்தில் எதிர்ப்புக்கள ஏற்படும். குடும்பத்தில் தப்பபிப்பிராயங்களைத் தவிர்க்க முயற்சிக்கவும். நாரி நோ, நரம்புப் பலவீனம், மனப்போராட்டம் என்பன வரும். அரசியல், ஆராய்ச்சித்துறை சார்ந்தோருக்கு நல்லகாலம்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,ஞாயிறு.*

## மீனம்

மனித வாழ்க்கையில் சுயநலம் இல்லாதவர்கள் இல்லை. மற்றவர்களையும், கடவுளையும் பேசிப் பேசியே சிலர்காலம் கழிக்கின்றார்கள். பகலும் இரவும் மாறி, மாறி வருவது போன்று உங்கள் தொழில் ஸ்தானத்தில் இலாபமும் நஷ்டமும் மாறி மாறி வந்தபடி இருக்கும். மனம் குமுறும்படி சிலர் நடந்து கொள்வார்கள். வீட்டில் எதிர்ப்பாலாருடன் வாக்குக்கலகம் வர இடமுண்டு. சமுதாயத்தினருக்கு சந்தர்ப்பத்துக்கு ஏற்றவிதமாக கதைத்துச் சமாளித்துக் கொள்வீர்கள். நெஞ்சுப் படபடப்பு, மூட்டுவலி, உடல் வரட்சித் தன்மை என்பன வரும். நரம்புப் பலவீனம் சிலரை வருத்தும். போக்குவரத்து, விவசாயம், கடல், மருந்துத்துறை தொடர்பானவர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,ஞாயிறு.*

## மகாதேவா ஜோதிடம்

# சில்லாலையில் சித்த வைத்தியத்தை பேணி வளர்த்த அருட்சகோதரி



சில்லாலை மண் சித்த வைத்தியத் துறையினைப் பேணிப் பாதுகாத்துப் பெருந் தொண்டாற்றிப் பெருமை அடைந்த மண். அந்த மண்ணின் மகளாய் சித்த வைத்தியத்துறைக்கும் சில்லாலைப பங்குத் திருச்சபைக்கும் இரண்டு கால் நூற்றாண்டுகள் ஓய்வுறக்கமின்றி மனித நேயப் பணிகள் பல புரிந்த செல்வி அகத்தம்மா விறாசுப் பிள்ளை அமரர் ஆகிவிட்டார்.

1924 ஆம் ஆண்டு தைத் திங்கள் 24 ஆம் நாள் சித்தவைத்தியர் குடும்பத்தில் எட்டாவது மகளாய் பிறந்தது முதல் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனப் பணி செய்வதையே தன் நோக்காகக் கொண்டு இலை மறை காயாய் இறக்கும் வரை பணி செய்த ஒரு சேவைச் செம்மல் இவர்.

'அகத்தம்மாக்கா' என அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்ட இவரின் வாழ்வு மகத்தானது. தனக்கென ஒரு சட்டக்கோர்வையை அமைத்து, வெள்ளைச் சட்டை போட்டு, இல்லற வாழ்வைத் துறந்து அர்ப்பண வாழ்வு வாழ்ந்த ஒரு "தனிக்கன்னிகை" இவர்.

தந்தையும் தனயனும் சித்த வைத்தியத் துறையில் பணிபுரிந்த போதும், தாமும் அத் துறையைத் தேர்ந்தெடுத்து தோல் வைத்திய முறையில் சிறந்து விளங்கினார். சில்லாலையில் பல சித்த வைத்தியர்கள் இருந்த போதும் இவரைத் தேடி எப்போதும் ஒரு கூட்டம் மொய்த்துக் கொண்டே இருக்கும். வருபவர்களின் உடல் குறைகளை மட்டுமல்ல உளக் குறைகளையும் ஆர அமர இருந்து கேட்டு ஆறுதல் கூறும் இவரின் தனிச் சிறப்பே இதற்குக்காரணமாகும். பணம் சேர்க்கும் நோக்கம் மட்டும் இல்லாமல் பணி புரியும் நோக்கையும் இவர் இலக்காகக் கொண்டிருந்தது இன்னுமொரு காரணமாகும்.

சில்லாலை பங்குத் திருச்சபைக்கு இவர் புரிந்த பணிகள் அளப்பரியன. இவர் இல்லாத பக்தி சபைகளோ பணிக்குழுக்களோ இருக்கமுடியாது என்று கூறினால் அதில் பெருந்தவறு இருக்காது. மரியாயின் சேனை, மாசில்லா மாதா கூட்டம், பங்குச்சபை, மாதர் முன்னேற்றச் சங்கம், வின்சன் டி போல் சபை போன்ற சபைகளில் எல்லாம் இவர் பணியாற்றியுள்ளார். மரியாயின் சேனையில் இளம் பெண்கள் பிரசீடியத்தை உருவாக்க இவர் பெரும் பங்காற்றினார். புனித வின்சன் டி போல் சபையில் இவரின் பணி சிறப்பானது. ஒரு கட்டத்தில் தமது வீட்டிலேயே கூட்டங்களை நடத்தி வறிய மக்கள் பலரின் துயர் துடைத்தார். இறந்தோர் இல்லங்களில் பான்ட் வாத்தியக் குழுவினருடன் சென்று திருப்பாக்களைப் பாடும் வழக்கத்தினை ஆரம்பித்த பெருமை இவரையே சாரும்.

தம் வாழ்வாலும் வார்த்தையாலும் அனைவரையும் தன்பால் ஈர்த்து அன்புப் பணி புரிந்த இவரின் வெண்ணாடைத் தோற்றம் சில்லையூர் வாழ் மக்கள் மனதுகளில் என்றும் நிறைந்திருக்கும். மிக நீண்ட காலமாக அஸ்மா நோயினால் அவதிப்பட்ட இவர் தம்நோயையும் நோயின் வருத்தத்தையும் பெரிதும் வெளிக்காட்டிக் கொண்ட ஒருவரல்லர். அர்ப்பண வாழ்வுக்கு என்றும் இலக்கணமாக விளங்கிய இவரின் இறுதிக்காலம் தம் உடன் பிறப்பான கார்மேல் மடத்து அருட்சகோதரியின் துணையைத் தவிர வேறு ஆறுதலைக் கொண்டிராவிட்டாலும் அனைத்தையும் அமைதியாக ஏற்றுக் கொண்டார். அவரின் மரணம் கூட அர்ப்பண வாழ்வுக்குச் சான்று பகர்ந்த ஓர் அமைதியான மரணம் தான்.

இவரின் அர்ப்பண வாழ்வும் அன்புப் பணியும் இவர் மறைவின் பின்னும் மறையாப் புகழ் பெற்றுள்ளன. இறைவனின் இன்ப சந்நிதானத்தில் இவர் என்றும் இளைப்பாற இறைவனை வேண்டுவோம்.

**- வண. பிதா றூபன் மரியாம்பிள்ளை.**

# ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்கான பொது விவேக பாடக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை22

இவ்வாண்டு முதல் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு கட்டாய பாடமாக அறிமுகப்படுத்தப்படும் 'பொது விவேகம்' பாடம் தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் டாக்டர் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கருத்துரையை ஆசிரியர் அ. குமாரவேல் நிகழ்த்துவார்.

இக் கருத்தரங்கில் ஒகஸ்ட் மாதம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப் பட்டது.

கல்லூரியின் கலை, வர்த்தக மாணவர்கள் மன்றம் பரீட்சை எடுக்கும்உயர்தரமாணவர்களின் நன்மை கருதி கடந்த ஒரு வாரமாக தொடர் கருத்தரங்குகளை நடத்தி வருவது (க)

UNOPS

இதழ் :16

July 2000

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதிப்புதவியுடனான ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகள் அலுவலகம்

## அவசர நிவாரண செயற்பாடுகளில் UNOPS/JRRP இன் பங்களிப்பு

### நலன்புரி நிலையங்களில் கழிவுகள் அகற்றும் நடவடிக்கை.




மல்லாகம் நீதவான் இல்லத்தில் உள்ள நலன்புரி நிலையத்தின் சுற்றயல் பகுதிகளில் கழிவுகளை அகற்றும் போது 6/7/2000

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் தற்கால நிலை UNOPS/JRRP இனது வழமையான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள உகந்ததாக இல்லை. இருப்பினும் இன்றைய சூழ்நிலையில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்ற, அவசர நிவாரண உதவிகளை மேற்கொள்ளும் உரிமையுடைய (Mandate) நிறுவனங்கள், அவர்களது நீர், சுகாதார திட்டங்களை முழுமையாக செயற்படுத்துவதற்குத் தேவையான மூலவளங்களின் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு UNOPS/JRRP தனது பங்களிப்பை வழங்கிவருகிறது.


குறிப்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC), ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் (GTZ) ஆகியவற்றின் அவசர நிவாரண செயல்திட்டங்களிற்கு UNOPS/JRRP தற்போது உதவி வழங்கி வருகிறது.

இச் செயல்திட்டங்கள் வரிசையில் ICRC இடம்பெயர்ந்த மக்கள் வாழுகின்ற சுற்றாடலில் சுகாதாரம் பேணும் வண்ணம் குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக இரண்டு லொறிகளையும் சாரதிகளையும் UNOPS/JRRP வழங்கியுள்ளது.

அத்துடன் இடம்பெயர்ந்த மக்களின் ஆரோக்கிய வாழ்வை பாதுகாக்கும் பொருட்டு அப்பகுதிகளில் அமைக்கப்பட்ட மலசலகூட கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகளிலும் ICRC ஈடுபட்டுள்ளது. இதற்காக UNOPS/JRRP ஐந்து பௌசர்களை(Sewerage Sanitation Bowser) வழங்கத் தீர்மானித்துள்ளது. ஆயினும் இவை இங்கேயே உற்பத்தி செய்யப்படுவதால் முடிவடைந்த இரண்டு பௌசர்களே தற்போது சேவையில் ஈடுபட்டு வருகிறது. ஏனையவற்றின் உற்பத்தி வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.



Sewerage Sanitation Bowser made in Jaffna.



யாழ் நிறுவனம் ஒன்றில் Sewage Sanitation Bowsers களின் உற்பத்தி நடைபெறும் போது

### நலன்புரி நிலையங்களில் குடிநீர் விநியோகத் திட்டம்

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் (GTZ) நலன்புரி நிலையங்களில் தண்ணீர் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக ஒவ்வொன்றும் 1000 லீற்றர்கள் கொள்ளளவுள்ள 60 தண்ணீர் தாங்கிகளையும் (Water Tanks), நான்கு உருக்குத் தண்ணீர் தாங்கிகளையும் (Stainless Steel Water Tanks) UNOPS/JRRP வழங்கவுள்ளது.
இத்தண்ணீர் தாங்கிகள் கட்டம் கட்டமாக ICRC கப்பல் மூலம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப் படுகின்றது.

இவ் அனைத்து திட்டங்களிற்குமான உதவிகளை வழங்குவதற்காக UNOPS/JRRP ஏழு மில்லியன் ருபாவை செலவிட்டுள்ளது.

UNOPS/JRRP அதன் நோக்கங்களிற்கமைவான திட்டங்களில் மற்றைய நிறுவனங்களுடன் சேர்ந்து மக்களிற்கு பயன்படக்கூடிய முறையில் செயற்படுகின்றது.


### அவசர கால அலுவலக உதவிகள்

பல அரச சார்பற்ற மற்றும் சர்வதேச நிறுவனங்கள் இடம்பெயர்ந்து வாழுகின்ற மக்களிற்கு அவசரகால உதவிகளை வழங்குவதில் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இந்நிறுவனங்கள் தமது வேலைகளை இலகுவாகவும் துரிதமாகவும் மேற்கொள்ளும் பொருட்டு இவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பல உதவிகளை UNOPS/JRRP வழங்கியுள்ளது.

MSF, CARE, UNICEF ஆகியவற்றிற்கு Toyota Land cruiser Vehicle களையும் UNHCR இற்கு ட்ரக், பிக்கப் ஆகிய வாகனங்களையும் வழங்கியுள்ளது.

இவைதவிர CARE, UNICEF, UNHCR, ACF, ICRC ஆகியவற்றிற்கு அலுவலகப் பாவனைகளுக்காக உபகரணங்களையும் UNOPS/JRRP வழங்கியுள்ளது.

### வைத்தியசாலைகள் அமைத்தல்



உடுவில் பகுதியில் UNOPS/JRRP இனால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மத்திய மருந்தகம்.

UNOPS/JRRP இன் கிராமிய சுகாதாரத் திட்டத்தின் கீழ் உடுவில் பகுதியில் 1.52 மில்லியன் ரூபா செலவில் புதிதாக ஒரு மத்திய மருந்தகமும், அளவெட்டியில் 1.78 மில்லியன் ரூபா செலவில் பிரசவ விடுதியும் அமைக்கப்பட்டுள்ளது.
இவற்றை கடந்த மாதம் பதில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர். Dr. உமா சிவபாதசுந்தரம் அவர்களிடம் UNOPS/JRRP உத்தியோக பூர்வமாக கையளித்தது.

ஏற்கனவே ஏழாலை மத்திய மருந்தகம் இரண்டு லட்சம் ரூபா செலவில் UNOPS/JRRP இனால் புனருத்தாரணம் செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்காக மோட்டார் சைக்கிள்கள் வழங்கல்



Dr. உமா சிவபாதசுந்தரம் உத்தியோக பூர்வமாக மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொள்கிறார்


பதில் மாகாண சுகாதார சேவைகள் பணிமனைக்கு பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதர்கள் ஆகியோர் மக்களிற்கு வழங்கும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக UNOPS/JRRP மோட்டார் சைக்கிள்களை வழங்கியுள்ளது. ஒவ்வொன்றும் 98,000 ரூபா பெறுமதியுடைய மூன்று Hero Honda வகை மோட்டார் சைக்கிள்களும், ஒவ்வொன்றும் 52,000 ரூபா பெறுமதியுடைய மூன்று Chaly மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்பட்டன. இவற்றை பதில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் Dr. உமா சிவபாதசுந்தரம் இம்மாதம் நடுப்பகுதியில் உத்தியோக பூர்வமாகப் பெற்றுக் கொண்டார்.

ஏற்கனவே நான்கு Hero Honda வகை மோட்டார் சைக்கிள்கள் மானிப்பாய், தெல்லிப்பளை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிற்கு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவைதவிர கடந்த மாதம் நிலவிய அசாதாரண சூழ்நிலையின் நிமித்தம் யாழ் அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கும் தற்காலிகமாக ஐந்து மோட்டார் சைக்கிள்கள் UNOPS/JRRP இனால் வழங்கப்பட்டது. இவற்றிற்காக 430,000 ரூபா செலவிடப்பட்டது.

இவ் உதவிகள் மூலம் அசாதாரண சூழ்நிலையிலும் அரசாங்க அதிகாரிகள் மக்களிற்கான தமது சேவைகளை ஆற்றியதைக் காணக்கூடியதாக இருந்தது.

### கோழித்தீன் உற்பத்திக்கான சோளம் பயிர்ச்செய்கை



நீர்வேலி P.பாலசிங்கம் என்பவருடைய சோளம் வயல்

யாழ் மாவட்டத்தில் கோழிப் பண்ணையாளர்களின் கோழித்தீன் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக UNOPS/JRRP யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கோழித்தீன் உற்பத்தி செய்யும் இயந்திரங்களை வழங்கியிருப்பதும், அதன் மூலம் கோழித்தீன் உற்பத்தியை மேற்கொள்வதற்காக விவசாயிகளுக்கு சோள உற்பத்தியை மேற்கொள்ள கமநலச் சேவை நிலையங்கள் ஊடாக சுழற்சிமுறையில் கடன் வழங்கிவருவதும் யாவரும் அறிந்ததே.

முதற்கட்டமாக சாவகச்சேரிப்பகுதியில் சோளம் உற்பத்தியை மாதிரியாக மேற்கொண்டவர்களின் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக புத்தூர், உரும்பிராய், கோப்பாய் ஆகிய கமநலச் சேவைகள் பிரிவுகளிலும் சோளப் பயிர்ச்செய்கை சிறுபோகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இப்பயிர்ச்செய்கையும் தற்போது வெற்றியளித்துள்ளதனால் விவசாயத் திணைக்களத்தினால் இம்மாதம் நடுப்பகுதியில் வயல் விழா நடத்தப்பட்டது.

இவ் விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட சோளத்தினை யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் கொள்வனவு செய்து இம்மாத இறுதிக்குள் யாழ் திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கோழித்தீன் உற்பத்தியை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான அனைத்து வேலைகளும் நடைபெறுகின்றன.

## HUMEDICA LANKA

**WANTED DOCTOR & NURSE**

**For three months from 1st Aug 2000 to work in Mobile**

**MEDI -MERCY CLINIC**

Among Displaced. Salary negotiable.

Apply:-

**Director, Humedica Lanka,**
**Sangarapillai Road,**
**Manipay.**

(76623)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 1949 - 01 - 04

மறைவு 2000 - 06 - 22

திருமதி

### மேரி அமலோற்பவநாயகி ஜெயநாதன்

(சின்னக்கிளி)


**"கடவுளை நோக்கி கரம் குவித்தேன்**
**அவர்தம் புனித மலையிலிருந்து**
**என்மீது கடைக்கண் நோக்கினார்**
**இனிநான் படுத்துறங்குவேன் விழித்தெழுவேன்-**
**ஏனெனில்**
**ஆண்டவர் எனக்கு ஆதரவாயிருக்கிறார்"**

காலஞ்சென்ற திருமதி அமலோற்பவநாயகி அவர்களின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தபால் மூலமும் இன்னும் பல வழிகளிலும் ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் நினைவுத் திருப்பலி நாளை (2000-07-23) ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணிக்கு (புதிய நேரம்) வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். அதில் கலந்து அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக பிரார்த்திக்குமாறு அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

*நெடியகாடு,*
*வல்வெட்டித்துறை.* (76624) **- குடும்பத்தினர்.**

## 43 ஆவது நாள் நினைவஞ்சலி



கருகம்பனை

### சுப்பிரமணியம் கனகசபை

(இளைப்பாறிய கிராமசேவையாளர்)

தோற்றம் 1925-02-22

மறைவு 2000-06-11

**எங்கள் குடும்பத்தின் இணையில் பெருந்தலைவா!**
**உங்கள் பிரிவால் உளமுருகி வாடுகிறோம்**
**ஊர் மதிக்க வாழ்ந்து உலகறியப் புகழ்நாட்டிச்**
**சீரோடும் சிறப்போடும் சிந்தை மகிழ்ந்திருந்து**
**பொன்விழா, மணிவிழா, பவளவிழாக் கண்டு**
**தானங்கள், தர்மங்கள், தவங்கள் பலபுரிந்து**
**என்றும் தலைநிமிர்ந்து ஏற்றமுற வாழ்ந்தீர்!**
**மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர் நீப்பர் மானம் வரினென்ற உண்மைதனை**
**இவ்வுலகில் நாட்டி இறைவன் அடிசேர்ந்தீர்!**
**எவ்வேளையும் நினைந்து என்றென்றும் அஞ்சலிப்போம்.**

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*இளவாலை வடக்கு, இளவாலை.* (C/12269)

## ஓய்வூதியத்தை பணமாக வழங்க முயற்சி

யாழ்ப்பாணம்,ஜூலை22

இடம்பெயர்வு காரணமாக வலிகாமம், வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் தங்கியுள்ள பளைப் பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய வவுச்சர்கள் பெறும் - ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியர் தொகையைப் பணமாக வழங்க தற்காலிக ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

வலிகாமப் பகுதியில் தங்கியுள்ள ஓய்வூதியர்களுக்கு சங்கானை பிரதேச செயலகத்திலும் -

வடமராட்சிப் பகுதியில் தங்கியுள்ள ஓய்வூதியர்களுக்கு புலோலி கமநல சேவைகள் நிலையத்தில் இயங்கும் பளை பிரதேச செயலகத்திலும் ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த ஓய்வூதியர்களுக்கு பளை கிராமிய வங்கி மூலம் முன்னர் ஓய்வூதியம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-117)

## பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை22

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் 32 வருடகால ஆசிரியர் சேவையின் பின் ஓய்வு பெற்ற உபஅதிபர் விசுவநாதன் அம்பலவாணரின் சேவை நலன் பாராட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் யாழ்ப்பாணம் தேசியகல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் பா.தனபாலன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பல முக்கிய பிரமுகர்கள் வாழ்த்துரை வழங்குவர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(க)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ். மாவட்டத் தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத் தலைவர் வீ. குமாரசாமி தலைமையில் கொக்குவில் கிழக்கு ஸ்ரீ கற்புலத்து மனோன்மணி சனசமூக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பாரவூர்தி உரிமையாளர்களையும் சாரதிகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(க)

★ ★ ★

பன்னாலை மாதர்கிராம அபிவிருத்தி சங்கத்தின் விசேட கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் திருமதி க. கமலாம்பிகை தலைமையில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. செல்வரட்ணம், வலிகாமம் வடக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி க. சிவராசா ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து பன்னாலை மகளிர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கக் கூட்டமும் நடைபெறும். (க-152)

★ ★ ★

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மக்கள் நலன்புரிச் சங்கத்தின் முதலுதவிப் படையணி உறுப்பினர்களுக்கும் மற்றும் பாடசாலைகளின் முதலுதவி பயிற்சி பெற்ற மாணவர்களுக்குமான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட அனைவரையும் சமூகமளிக்குமாறு பொறுப்பாசிரியர் கேட்டுள்ளார். (ஐ-10)

★ ★ ★

'மோட்டோ ரோலா' தொலைத் தொடர்பு நிலைய உரிமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

'மோட்டோரோலா' தொலைத் தொடர்பு உரிமையாளர்களை இந்தக் கலந்துரையாடலுக்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ)

## தொழிற் பயிற்சி நிலையம்

**நகர்ப்பணி திருச்சபை**

**41, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

**மேற்படி முகவரியில் இயங்கி வந்த நிலையம் தற்போது இணுவில் மக் லியோட் வைத்தியசாலை வளாகத்தில நடைபெறுகின்றது. 24-07-2000 திங்கள் காலை 9.00 மணிக்கு நிர்வாகத்தினர் அனைத்து மாணவிகளையும் சந்திக்க இருப்பதால் தவறாது சமுகம் தரவும்.**

* **தட்டச்சு, தொழிற்பயிற்சி வகுப்புக்கள் தினமும் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணி வரை நடைபெறுகின்றன.**

அருள்திரு. S. C. ஆணல்ட்,
முகாமையாளர்

(76612)

## நினைவஞ்சலியும் தசாக அழைப்பும்



தோற்றம் 13 - 06 - 1922

மறைவு 13 - 07 - 2000

### யோகீஸ்வரசர்மா அன்னலட்சுமி அம்மா

| | | |
|---|---|---|
| சனிக்கிழமை | - | தசாகம் |
| ஞாயிற்றுக்கிழமை | - | புண்ணியாசனம் மாசிகம் |
| திங்கட்கிழமை | - | சபிண்டிகரணம் |
| செவ்வாய்க்கிழமை | - | கிரகயக்ஞம் |

எமது அன்புத் தாயாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

நிரந்தர முகவரி:
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

(C/12284)

தற்போதைய முகவரி:
குன்னாலை மத்தி,
குன்னாலை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு 12 - 12 - 1957

சிகாடியவர் அழிப்பு 02 - 08 - 1999

அமரர்

### மார்க்கண்டு லோகேஸ்வரன்

(இலங்கை மின்சாரசபை ஊழியர், அஜந்தா போட்டோ வீடியோ தொலைத் தொடர்பு உரிமையாளர், ச.மு.க. சமாச யாழ். நல்லூர் பிராந்திய செயலாளர், நல்லூர் லயன் கழக உறுப்பினர், செம்மணி இந்து மயான அபிவிருத்திச்சபை உறுப்பினர்)

**திதி 22-07-2000**

**ஒளிப்படம் உருவாக்கி ஓசையை ஒருங்கிணைத்து**
**சாதனை பல படைத்தீர்!**

**இருளினில் தவிக்கும் முகங்களுக்கெல்லாம்**
**ஒளி கொடுத்தீர்!**

**எம் குடும்பம் தழைத்திடவே இராப் பகலாய்**
**நீர் உழைத்தீர்!**

**உலகம் போற்றும் உத்தமனாய்**
**நீர் வாழ்ந்தீர்!**

**காலன் உம்மை அழிக்க முன்னர்**
**கயவர் உம்மை அழித்தனரே!**

**காலம் எமக்கு பதில் சொல்லும்**
**கனவாலே உங்களை மறப்போமா!**

**மனைவி, பிள்ளைகள், தாய்,**
**சகோதர சகோதரிகள், மாமன்,**
**மைத்துன, மைத்துனிகள்,**
**உற்றார், உறவினர், நண்பர்கள்.**

*63, சங்கிலியன் வீதி,*
*நல்லூர்.* (76566)

# சித்த மருந்துகள் மீது நோயாளர்கள் ஆர்வம்

உரும்பிராய், ஜூலை 22

சித்தமருத்துவத்துறை மருந்துகள் மீது நோயாளர்களிடையே ஆர்வம் அதிகரித்துள்ளது.

வலி. கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய், ஊரெழு அலுவலகத்தில் இயங்கும் சித்தமருத்துவ மருந்தகத்தில், பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் வந்து மருந்துகளைப் பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

அரசாங்க மருந்தகங்களில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாள்களில் இம் மருந்தகம் இயங்குகிறது. (ஐ-154)

# மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் இரு பாடசாலைகள் இணைவு

கல்வி மறுசீரமைப்புத்திட்டத்தின்கீழ் இதுவரை தனித்தனியாக இயங்கி வந்த மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் இணைந்து ஒரு பாடசாலையாக (கல்லூரியாக) செயற்பட்டு வருகின்றன. தற்போது வகுப்பு ஒன்று தொடக்கம் வகுப்பு ஒன்பது வரை கனிஷ்ட பிரிவாகவும், வகுப்புப் பத்துத் தொடக்கம் வகுப்பு பதின்மூன்று வரை சிரேஷ்ட பிரிவாகவும் இரு கல்லூரிகளும் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளதாக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு. சண்முகநாதன் தெரிவித்தார்.

இரு கல்லூரிகளினதும் கல்விச் செயற்பாடு மட்டுமே இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை — மானிப்பாய் இந்துக்கல்லூரி, மகளிர் கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளினதும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் இணைந்து கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமையன்று நடத்திய பெற்றோர்களுக்கான பொதுக் கூட்டத்தில் இவ் விரு கல்லூரிகளும் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினை பற்றியும் மறுசீரமைப்பில் இக் கல்லூரிகளின் நிலை, எதிர்காலச் செயற்பாடு என்பன குறித்தும் விரிவான கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

பெரும் எண்ணிக்கையிலான பெற்றோர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

# கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை, ஜூலை 22

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையேயான கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி மூன்றாந் தவணை ஆரம்பத்தில் நடைபெறவுள்ளது.

பதினொரு வயது, பதின்மூன்று வயது ஆகிய பிரிவுகளில் உள்ள மாணவர்களுக்கு கல்வி உயர் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய போட்டிகளை நடத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார்.

பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் கோட்ட மட்ட போட்டியில் பங்கு பற்றலாம். போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் தமது வயதினை உறுதிப்படுத்துவதற்கு பிறப்புச் சான்றிதழையும், ஆளடையாள அட்டையையும் கொண்டு வரவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (ஐ 118)

# சம்பளம் வழங்கப்பட்டது

குருநகர், ஜூலை 22

யாழ். கல்வி வலயத்தினுள் இயங்கும் பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களின் இம் மாதம் சம்பளம் கொக்குவிலில் இயங்கும் யாழ் கல்வி வலய கணக்குக் கிளை மூலம் நேற்றைய தினம் வழங்கப்பட்டது. (ஐ-51)

# சிங்கள இலக்கியங்களில் தமிழின் வரலாற்றை ஆய்வு செய்ய வேண்டும்

## சஞ்சிகை வெளியீட்டு விழாவில் துணைவேந்தர்

நல்லூர், ஜூலை 22

இரண்டாயிரத்து 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஈழத்தமிழ் இலக்கியங்கள் தேடிக்கண்டு பிடிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படவேண்டும். சிங்கள இலக்கியங்களில் உள்ள தமிழ் இலக்கிய வரலாறு ஆய்வு செய்யப்பட்டு நூல்வடிவில் வெளிக்கொண்டு வரப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பலகலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தின் 'தமிழோசை' வெளியீட்டு விழாவில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எஸ். குணேஸ்வரன் தலைமையில் கைலாசபதி அரங்கில் நடைபெற்ற இந்த வெளியீட்டு விழாவில் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

சிங்கள இலக்கியங்களில் உள்ள தமிழ் இலக்கிய வரலாறுகளை ஆய்வு செய்து எழுத வேண்டும். தமிழோசை சஞ்சிகையில் அது தொடர்பாக விமல் சுவாமிநாதனின் கட்டுரை ஒன்றும் இடம்பெற்றுள்ளது. கடந்த சில மாதங்களாக நல்ல நிகழ்வுகள் எதுவும் நடக்காதா என எதிர்பார்த்திருந்த எமக்கு தமிழ்மன்றம் சஞ்சிகை வெளியீட்டை நடத்த முன்வந்தது மகிழ்ச்சி தருகிறது. நீண்ட இடைவெளிக்குப்பின் தமிழோசை கேட்கிறது. போத்துக்கேயர் காலத்திற்கு முற்பட்ட எமது தமிழ் இலக்கியங்கள் குறித்த தகவல்களை வழங்கத் 'தமிழோசை' முன்வரவேண்டும்— இவ்வாறு அவர் கூறினார்.

மன்றத் தலைவர் குணேஸ்வரன் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

யாழ். பல்கலைக்கழகம் வளாகமாகச் செயற்பட்ட காலத்தில் 1988—89 ஆம் கல்வியாண்டு காலப்பகுதியில் மாணவர்கள் இதனை வெளியிட்டனர். பின்னர் ஏற்பட்ட சூழ்நிலைகளால் அது ஒரு தசாப்தமாக வெளிவர முடியவில்லை எனினும் தமிழ் மன்றம் காலத்தின் தேவையறிந்து முக்கிய செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்து வந்தது. 'தமிழோசை' வெளியிட வேண்டும் என்பதில் தமிழ்த் துறைத் தலைவரும் ஏனையோரும் அக்கறை கொண்டு அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டதால் இன்று அது மீண்டும் வெளிவருகின்றது. எதிர் காலத்தில் தடங்கல்களின்றி வெளிவர மன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும்— என்றார்.

### பேராசிரியர் சண்முகதாஸ்

யாழ் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேசும் போது கூறியதாவது:-

1975 இல் யாழ். வளாகத்தில் தமிழ்மன்றம் தொடங்கப்பட்ட போது இங்கே சிங்கள மாணவர்களும் பயின்றனர். சில பிரச்சினைகளும் இருந்தன. அன்று மன்றம் வெளியிட்ட 'செந்தழல்' சஞ்சிகை மிகவும் காரசாரமான எழுத்துக்களுடன் வெளிவந்ததால் பின்னர் அதை நிறுத்தத் தீர்மானம் எடுக்க வேண்டியேற்பட்டது. செந்தழலே பின்னர் தமிழோசையாக வெளிவந்தது.

சிங்கள இலக்கியங்களில் ஈழத்து தமிழ் இலக்கியங்கள் பற்றிய தகவல்கள் உள்ளன. அவற்றைப் படிப்பதன் மூலம் புதிய தரவுகள் கிடைக்கும் வாய்ப்புக்கள் உள்ளன. வரலாற்றை எழுதுவதென்பது கல்லில் நார் உரிப்பது போன்றது. நீண்டகால இடைவெளிக்குப்பின் மீண்டும் கேட்கும் தமிழோசையினூடாக தமிழர்களுடைய இலக்கியங்கள் உலகிற்கு எட்ட வேண்டும். அதற்கான செயற்பாடுகளை மன்றம் கவனிக்க வேண்டும் — என்றார்.

### சிவலிங்கராஜா

தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா பேசும் போது கூறியதாவது:-

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சிமலர் போல பத்து ஆண்டுகளின் பின் தமிழோசை வெளிவருகிறது. எனினும் குறிஞ்சி மலர்போல் இல்லாமல் தொடர்ந்து அது வெளிவர வேண்டும்.

சஞ்சிகைக்கான ஆக்கங்கள் பெறுவதும் கடினம். எனினும் தமிழ் மன்றம் தன்னுடைய தீவிர செயற்பாட்டினால் ஆக்கங்களைப்பெற்று சஞ்சிகையை உரிய காலத்தில் வெளியிட வேண்டும் — என்றார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் கவிஞர் கே. பத்மநாதன் தனது உரையில் —

விஸ்தரிப்பும் பன்முகப் பார்வையும் நிறைந்து காணப்படும் 'தமிழோசை' சஞ்சிகையில் பல்வேறு கோணங்களில் காணப்படும் ஆக்கங்கள் பயனுள்ள வகையில் தரப்பட்டுள்ளன — என்றார்.

தமிழ்த்தாய் வாழ்த்தை செல்வி ரஞ்சனாவும் நன்றியுரையை மன்றச் செயலாளர் செல்வி கே. ரஜனியும் வழங்கினார்கள்.

நூலின் முதல் பிரதியை துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளையிடம் இருந்து பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் பெற்றுக் கொண்டார். (ஐ-111)

# வாசகர் திருமுகம்

## ஆசிரியர் தெரிவில் நீதி நிலைநாட்டப்படுமா?

வடக்கு — கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக உயர்தரப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்குவதற்கான வர்த்தமானி 1999 நவம்பரில் வெளியிடப்பட்டது வயதெல்லை 30 எனவும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவர்கள் விண்ணப்பிக்க முடியாது என்ற நிபந்தனையுடனும் விண்ணப்பம் கோரப்பட்டது. சில மாதங்களின் பின்னர் நேர்முகப் பரீட்சைக்கான பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்ட போது ஆரம்ப ஆசிரியர் நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் புறக்கணிக்கப்பட்டதால், ஆரம்ப நெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோரால் நேர்முகப்பரீட்சை தடைப்படுத்தப்பட்டது. எமது போராட்டங்களின் போது தகுதியானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும் என ஈ. பி. டி. பி. அமைப்பினரால் உறுதிமொழி வழங்கப்பட்டது. அவர்களின் தலையீட்டால் வடக்கு—கிழக்கு மாகாண அமைச்சு செயலாளர் தனது பணிப்புரையில் 'ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட பட்டியலின்படி நேர்முகப் பரீட்சையை உடன் ஆரம்பிக்கும்படியும் ஆரம்ப நெறி ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவரின் விபரம் அடங்கிய பட்டியல் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் அனுப்பப்படும்' என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் 19 — 07 — 2000 இல் வெளியிடப்பட்ட பட்டியலில் ஒரு சில ஆரம்ப ஆசிரியருக்கும் ஏனையவை கணிதம், விஞ்ஞானம், உடற்கல்வி, மனையியல், ஆங்கிலம் போன்ற துறையினருக்கு உரிய பெயர்களைக்கொண்டிருந்ததுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் மாணவர்களின் பெயர்களை அதிகளவில் கொண்டதுடன் உயர்தரத்தில் 180 -200புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர்களே பட்டியலில் இடம்பெற்றுள்ளதை உயர்புள்ளிகளைப் பெற்றும், வெட்டுப் புள்ளியால் பல்கலைக்கழகம் செல்லமுடியாது வேலை வாய்ப் பற்று ஆசிரிய நியமனத்துக்கு விண்ணப்பித்த எமக்கு பெரும் அதிர்ச்சியாக உள்ளது தகுதியிருந்தும் நாம் ஏன் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை? வர்த்தமானியில் குறிப்பிட்ட விதிகளுக்கமைய நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து நியமனம வழங்க உதவுமாறு கல்விப் பணிப்பாளர்களையும் ஈ. பி. டி. பி கட்சி அமைப்பினரையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஜெ. டி.ஜான்சியா

யாழ்ப்பாணம். (பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக)

## மனச்சாட்சி எங்கே?

'பாடுபடுபவன் யாரோ பலன் பெறுபவன் யாரோ' என்ற நிலையாகிவிட்டது எமது நிலை. காரணம் அண்மையில் ஜி. சி. ஈ. (உ/த) பரீட்சைப்பெறுபேறுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஆசிரியர் தெரிவில் 95 வீதமானவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் என்பது தெட்டத் தெளிவு. குறிப்பாக 'ஆரம்ப நெறி' க்கு விண்ணப்பித்த அதாவது ''ஆரம்ப நெறியால் பாதிக்கப்பட்ட மாணவர்'' சங்கமானது பல இன்னல்களையும் பல சோதனைகளையும் சந்தித்தது. ஆனால் அச்சங்கத்திலிருந்து குறைந்த பட்சம் ஒரு மாணவராவது தெரிவில் இடம்பெறவில்லை. மாறாக உயர்தரப்பரீட்சையில் அதி உயர் புள்ளி (290 க்கு மேல்) பெற்ற மாணவர்களையே தெரிவு செய்துள்ளனர். அதிலும் அனேகமானோர் பல்கலைக் கழகத்தில் கல்வி பயில்வதோடு வெளியே அரசாங்க உத்தியோகத்திலும் ஈடுபட்டு அது இரண்டும் போதாதென்று மூன்றாவது வேலைக்காக ஆரம்ப நெறிக்கும் விண்ணப்பித்திருக்கிறார்களே? இத்தகையோர் ஒரு தொழிலும் இல்லாது திணறும் ஏழைகளைப் பற்றிச் சிந்தித்தார்களா?

பாதிக்கப்பட்ட மாணவர்கள்.

## சம உரிமை கிடைக்குமா?

அண்மையில் தனியார் தொலைபேசி உரிமையாளர்கள் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அது இன்று வரை கடிதங்கள் 'தான்' எழுதியதே தவிர ஆக்கபூர்வமான முயற்சி எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லை. இது இவ்வாறு இருக்க 16 – 07 – 2000 இல் தொலைபேசி உரிமையாளர்கள் சங்கம் என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச் சங்கம் சில நல்ல கருத்துக்களையும் முன்வைத்துள்ளமை வரவேற்கத் தக்க நல்ல காரியமாகும். இதனைப் பலமாக்கி எல்லா தொலைபேசி உரிமையாளர்களும் தவறாது அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்வது இக்கால கட்டத்தில் இன்றியமையாத ஒன்றாகும். ஆனால் மோட்டோரோலா தொலைபேசி உரிமையாளர்கள் சுமார் 64, 000 ரூபா வரை செலுத்தி இதனைப் பெற்றுக்கொண்டவர்கள். இவர்களின் தொலைபேசி முழுமையாக இயங்கிய காலகட்டத்திலும் மிகவும் சிரமப்பட்டே அழைப்புகள் பெற முடிந்தது. 20 - 04 – 2000 இல் இருந்து இவர்களின் தொலைபேசி உள்ளூர் அழைப்புக்கூட இன்றி முழுமையாகத் தடைப்பட்டு உள்ளதை இச்சங்கம் மிகவும் கருணை மனப்பாங்கோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே தொலைபேசி குறிப்பிட்ட அளவு இயங்கும் இவ்வேளையில் மோட்டோரோலா இணைப்புக்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்தித்தர முயற்சி எடுத்து தர வேண்டும் எனவேண்டுகின்றேன். யாழ். ரெலிக்கொம் லிமிட்டட் இதில் கவனம் செலுத்துமா?

மோட்டோரோலா தொலைபேசி உரிமையாளர்,
கரவெட்டி.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

தாவடி–மானிப்பாய் றோட்டில், சுதுமலை அம்மன் கோயிலுக்கு அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இல. 1061, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (76554)

யாழ். மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். 48, 2 வது லேன், பிறவுண் றோட், கந்தர்மடம். (76588)

### முயல் விற்பனைக்கு

வெள்ளை நிறம் கொண்ட (சிவப்புக் கண்) முயல்கள் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புகளுக்கு: இல. 85, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (76597)

### விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய தளபாடங்கள், மின்சார உபகரணங்கள், வெளிநாட்டுப் பீங்கான் வகைகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு, இராசா வாமதேவன், இல. 28/3, மணல்தரை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். எனும் முகவரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் தொடர்பு கொள்ளவும் (76620)

இரண்டு நாள் முதல் ஏழு நாள் வரையிலான பல இன கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கே. வி. சாமி, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (76610)

### இறைச்சிக்கோழி

சேவல், கல்பேட், விறாத்துக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (76161)

### ஆங்கிலம் விசேடம்

O/L பரீட்சையில் Distinction Credit, G. A. Q, A/L 2002 ஆங்கிலம் அடிப்படை அறிவிலிருந்து (ஆண்டு 9, 10 உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன்கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (76598)

### விற்பனைக்கு

பாவனையிலிருந்த நல்ல நிலையிலுள்ள வீட்டுத் தளபாடங்களும் வேறு சில பொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு இல. 79, செட்டித் தெரு, நல்லூர். (76583)

Sony T.V 2199 (Wega Japan) V.C.R S L.V ED4 ME (Japan) புதியது உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு T. தெய்வேந்திரம், கோப்பாய் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (76596)

மரத்தளபாடங்கள், குளிர் சாதனப் பெட்டி, ஓர்கன், றைஸ் குக்கர், அம்பியர் மீற்றர், எவர் சில்வர் பொருள்கள், பீங்கான் கோப்பை, கண்ணாடிப் பாத்திரங்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 39/1, இராசாவின் தோட்டம், வைரவர் கோயில் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (76622)

பனசோனிக் SR — 50, SD — 125 புதிய வீடியோ டெக்குகளும் 150-க்கும் மேற்பட்ட CD யில் பதிவு செய்யப்பட்ட புதிய திரைப்படக் கொப்பிகளும், பஜாஜ் 4 S சம்பியன் பஜமோடல் (முதல் உரிமையாளர்) மோட்டார் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: சி. சற்குணமூர்த்தி, இல. 52, மாட்டின்வீதி, யாழ்ப்பாணம். (76617)

### தவறிவிட்டது

கைதடி, நுணாவில், சாவகச்சேரியைச் சேர்ந்த துரைச்சாமி இரத்தினபூபதி என்பவருடைய விசேட அ. அ. (இல. 091016484) 23 – 06 – 2000 அன்று ஆஸ்பத்திரிக்கும் பஸ் தரிப்பு நிலையத்திற்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தற்காலிக முகவரியான க. ஞானசேகரம், கீரிமலை றோட், விளாவெளி, சங்கானை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (76621)

### கடைவாடகைக்கு

மானிப்பாயில் 'சைனீஸ்' அச்சகத்திற்குப் பக்கத்தில் சகலவசதிகளுடன் கூடிய கடைஒன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு கோ. முருகதாஸ் ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாய். (76595)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1969 இல் பிறந்த7 இல் செவ்வாய், புரட்டாதி நட்சத்திரம், சிரகபாவம் 36 உடைய பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை அரசதொழில், வெளிநாடு விரும்பத்தக்கது தொடர்பு விள இல. 1963 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (76602)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 42 வயது நிரம்பிய சுவாதி நட்சத்திரம், 4 ஆம் பாதம், 41 வயது ஆயிலிய நட்சத்திரம் உடைய அரசபணியில் உள்ள நற்பண்புகொண்ட பெண்களுக்கு உத்தியோகம் பார்க்கும் மணமகன்மார் தேவை. குழந்தைகளில்லாத தாரமிழந்தவர்களுக்கும் பொருத்தமான விடத்து கவனிக்கப்படும். உடன் தொடர்புகளுக்கு: விள. இல. 1062, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (76593)

# கிராமிய வங்கி சமாசத்தின் இயக்குநர் சபை விஸ்தரிப்பு

அரியாலை, ஜூலை 22

யாழ் மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் இயக்குநர் சபை விஸ்தரிப்புச் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற மேற்படி சமாசத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி இதுவரை காலமும் ஐந்து பேரைக்கொண்ட இயக்குநர் சபை ஒன்பது பேரைக் கொண்டதாக விஸ்தரிப்புச் செய்யப்படவுள்ளது

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மேற்படி சமாசத்தில் இடமளிக்கும் வகையிலேயே இந்தவிஸ்தரிப்பு இடம்பெறுவதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை

கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தலைவராக மீண்டும் சீ. வி. கே. சிவஞானம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சி. குமரவேல் சமாசத்தின் உபதலைவராகவும்—

கைதடி, உடுப்பிட்டி மற்றும் ஊர்காவற்றுறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களாக முறையே சி. சுப்பிரமணியம், சி. கணபதிப்பிள்ளை, எஸ். சத்தியதாசன் ஆகியோர் சமாசத்தின் இயக்குநர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ–7–17)

# பிரியாவிடை வைபவம்

வடமராட்சி, ஜூலை 22

கட்டைவேலி பருத்தித்துறை சேகர பங்குக்குருவாக கடந்த 6 வருடங்களாகப் பணியாற்றிய அருட்திரு பி. ஜே. மேதருக்கு பிரியாவிடை வைபவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கட்டைவேலி மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ - 173)

# அறிவித்தல்

### மீண்டும் நாயன்மார்கட்டில் ....

நாயன்மார்கட்டு முறிவு நெரிவு வைத்தியசாலை மீண்டும்

இல. 111, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு

(வெயில் உகந்த விநாயகர் ஆலயம் முன்பாக)

என்னும் தற்காலிக முகவரியில் இயங்குகின்றது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

வைத்திய கலாநிதி

ஏ. உமாகாந்தன்

(76613)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகம்மா பெஞ்ஜமின்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் 42/18, செமிற்றி றோட், விஜயபுர மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா பெஞ்ஜமின் 20-07-2000 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெஞ்ஜமினின் மனைவியும் வண. பெஞ்சமின் ஜெயராஜா (போதகர் தெ. இ. திருச்சபை), புஸ்பராஜமணி (மட்டக்களப்பு), ஜெயபாலன் (இணுவில்), செல்வராணி (கனடா), அற்புதமலர் (மட்டக்களப்பு), ஜெயகுலேந்திரன் (சவுதி), ஜெயநேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரவதனா, வண. மதுரநாயகம், (போதகர் மட்டக்களப்பு), புஸ்பகாந்தினி, ஜெகநாதன், தேவமனோரஞ்சன் (தெ.க. திருச்சபை மட்டக்களப்பு). சுவிஸ்ரா. திருமதி ஜெயநேசன் (கனடா), ஆகியோரின் மாமியாரும். ஏஞ்சலின், ரோகுலன், மீரா, சணா, சுவீற்றி, நீற்றி, பிரசாந், ஆனந், றோய் ஆகியோரின் பேர்த்தியுமாவார்

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22-07-2000) சனிக்கிழமை பி.ப. 3.00 மணி (புதிய நேரம்) மட்டக்களப்பில் நடைபெறும். அதே நேரம் மகன் (ஜெயபாலன் இணுவில் மேற்கு) இல்லத்தில் ஜெபக்கூட்டம் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:–

ஏ. தேவகுன்ராஜா

இணுவில் மேற்கு. (76607)

## பிரான்சிஸ் ஜெய யேசுதாசன்

மல்வம் உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஜேர்மனியில் வசித்து வந்தவருமாகிய திரு. இ. யோண்பிள்ளை (முன்னாள் உடுவில் கிராம சபை உறுப்பினர்) அவர்களின் மூத்தமகன் பிரான்சிஸ் ஜெய யேசுதாசன் (இராசன்) 16-7-2000 அன்று காலமானார்.

இவரின் நல்லடக்கம் இன்று (22-7-2000) சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்

செ. இரத்தினம்.

(மைத்துனி)

மல்வம்,
உடுவில். (76618)

# நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர்

**சின்னத்தம்பி மாணிக்கவாசகர்**

(இளைப்பாறிய உப தபால் அதிபர், நீர்வேலி)

மலர்வு 20-12-1910 உதிர்வு 12-06-2000



திருமதி

**மாணிக்கவாசகர் சிவபாக்கியவதி அம்மா**

மலர்வு 10-10-1917 உதிர்வு 23-06-2000

மேற்படி இரண்டு இறுதிக் கிரியைகளிலும் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பல வழிகளிலும் உதவி நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (23—07—2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மா. புவனேந்திரன் (மகன்),
மா. குலேந்திரன் (மகன்).

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. [76591]

# ஆசிரியர் நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜுலை22

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடமராட்சிக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வசிப்போருக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி முதல் நடைபெறும் என்றும் -

தீவக கல்வி வலயத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வசிப்போருக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 27 ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் - மேற்படி கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வலிகாமம் மற்றும் தென்மராட்சி வலயங்களைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறும் திகதி சம்பந்தப்பட்டவர்களுக்கு விரைவில் அறிவிக்கப்படும் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் - மேற்படி நியமனத்துக்காக விண்ணப்பித்தும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்கள் அடங்கிய குழு ஒன்று நேற்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. வி.குகேந்திரனைச் சந்தித்து தமது பிரச்சினை குறித்துக் கலந்துரையாடியது.

தற்போது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களில் பலர் பல்கலைக்கழகங்களின் உள்வாரி மாணவர்களாக கற்கைநெறிகளைத் தொடருகின்றனர் எனவும் -

எனவே ஏற்கனவே அறிவித்த தன்படி பல்கலைக்கழகக் கல்வியைத் தொடருபவர்களைத் தவிர்த்தே ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும் எனவும் - நாடாளுமன்ற உறுப்பினர் தன்னைச் சந்தித்த குழுவிடம் தெரிவித்தார்.

இதே சமயம் - பல்கலைக்கழக மாணவர்கள் இந்த ஆசிரிய நியமனத்தைப் பெறுவதாயின் பல்கலைக்கழக கல்வியை நிறுத்த வேண்டி ஏற்படுமெனவும் -

எனவே இவ்வாறு வெற்றிடமாகும் இடங்களுக்கு புதியவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர் எனவும் - அவர் மேலும் தெரிவித்தார். (இ-73-118-173)

# அரிசி பழுதடைந்திருப்பின் விநியோகிக்க வேண்டாம்

## கூ.சங்கங்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜுலை22

யாழ். செயலகத்தினால் ப.நோ. கூ.சங்கங்களுக்கு விநியோகிக்கப்படும் அரிசி பழுதடைந்திருந்தால் அவற்றைச் சங்கங்கள் தமது கிளைகளுக்கு வழங்காமல் களஞ்சியத்தில் வைத்திருக்க வேண்டுமென்று நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற நிவாரண விநியோகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ப.நோ. கூ.சங்கத் தலைவர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் வைக்கப்பட்டிருக்கும் பழுதான அரிசியினை யாழ். செயலகம் பொறுப்பேற்கும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் உரையாடப்பட்ட விடயங்களும் வருமாறு:-

* விவசாயிகளுக்கு மாதாந்தம் ஒதுக்கப்படும் மண்ணெண்ணெயின் அளவினை மூன்று லட்சம் லீற்றராக அதிகரித்தல் வேண்டும்.
* அரச களஞ்சியத்தில் மா தாராளமாக இருப்பதால் ப.நோ.கூ. சங்கங்கள் தமது தேவைக்கேற்ப மாவினைக் கொள்வனவு செய்ய முடியும்.
* மே மாத நிவாரணம் வழங்கப்படாதவர்களின் பட்டியல்கள் இதுவரையும் செயலகத்தில் ஒப்படைக்கப்படவில்லை. இதனை உடனடியாக ஒப்படைக்க வேண்டும்.

ப.நோ.கூட்டுறவுச் சங்கங்கள் அரச களஞ்சியத்தில் அரிசி மூடைகளை கம்பியால் குத்திப் பார்த்து தரமான அரிசியினையே பெறவேண்டும் - என்று திட்டப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் கூறியபொழுது இது சாத்தியப்படாததொன்று, ப.நோ.கூ.சங்கங்கள் சகல அரிசி மூடைகளையும் குத்திப் பார்க்க முடியாது என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே.சண்முகநாதன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி விடயம் தொடர்பாகத் திட்டப் பணிப்பாளருக்கும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்குமிடையில் கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. (ஐ-5)

# தொலைபேசிக் கட்டணத்தைச் செலுத்த இடம்பெயர்ந்தோருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜுலை22

தென்மராட்சி மற்றும் அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த தொலைபேசி உரிமையாளர்கள் தமது மாதாந்தக் கட்டணச் சிட்டைகளை எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் ரெலிக்கொம் நிறுவன முகாமையாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு பெறாதவர்கள் இங்கு இல்லை எனக் கணிக்கப்பட்டு, அவர்களுக்கான இணைப்புத் துண்டிக்கப்படும் என்று ரெலிக்கொம் நிறுவனம் அறிவித்துள்ளது. (இ-3)

# அனுமதி அட்டை தபாலில்

யாழ்ப்பாணம்,ஜுலை22

எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

தென்மராட்சி, பளைப் பிரதேசங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் தமக்குரிய அனுமதி அட்டைகளை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இயங்கும் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மலேரியா தடுப்பு மருந்து தெளிக்கும் பணி ஆரம்பம்

வடமராட்சி,ஜுலை22

வடமராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள குடிசைகளுக்கு மலேரியாத் தடுப்பு மருந்து தெளிக்கும் பணி இன்று சனிக்கிழமை ஆரம்பமாக இருக்கின்றது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மலேரியாத் தடுப்புப் பிரிவினால் இந்தப் பணி மேற்கொள்ளப்படும்.

கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரிக்கு அருகில் உள்ள காணியில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுமார் பத்து குடிசைகளுக்கு இன்று மலேரியா தடுப்பு மருந்து தெளிக்கப்படும். எதிர்வரும் திங்கட்கிழமை புலோலி கிழக்கு உத்தராவத்தையில் ஏற்படுத்தப்பட்டுள்ள 24 குடிசைகளுக்கு மலேரியாத் தடுப்பு மருந்து தெளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மலேரியாத் தடுப்பு மருந்து பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு கிடைத்த பின்னர் வடமராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள ஏனைய குடிசைகளுக்கும் மலேரியாத் தடுப்பு மருந்து தெளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

தொண்டர் நிறுவனங்களால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட இந்தக் குடிசைகளில் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ளனர். (இ-173)

# றோட்டறிக் பதவி ஏற்பு வைபவம்

யாழ்ப்பாணம்,ஜுலை22

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் அறுபதாவது தலைவர் றோட்டேறியன் அ.பஞ்சலிங்கம் தலைமையிலான நிர்வாகக் குழுவின் பதவியேற்பு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். கஸ்தூரியார் வீதியிலுள்ள அருணஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஈரோவில் நிறுவன இயக்குநர் பொறியியலாளர் எம்.ராமதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (இ-4)

# இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு ஈ.பி.டி.பி. குழுவினர் நேற்று விஜயம்

யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்தோர் தங்கியிருக்கும் முகாம்கள் பலவற்றுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தலைமையிலான குழு ஒன்று நேற்று விஜயம் செய்து பொதுமக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை அறிந்து கொண்டது.

வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளிலுள்ள அகதி முகாம்களுக்கு விஜயம் செய்த இந்தக் குழுவில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த நல்லூர்ப் பிரதேச சபைத்தலைவர் கே. மணிபல்லவராஜன் (நிசாந்தன்), வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் அன்ரன் வெலிச்சோர் ஜோன்சன், கரவெட்டிப் பிரதேச சபைத்தலைவர் வி.நடராஜா, பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர் ஸ்ரீ. ரங்கேஸ்வரன், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தலைவர் பூ. குணசிங்கம் ஆகியோரும், அக்கட்சியின் முக்கிய பிரமுகர்களும் இடம் பெற்றிருந்தனர்.

"அ", "இ", "உ" என்ற வேறுபாடின்றி சகல வகையான பங்கீட்டு அட்டைகளுக்கும் நிவாரணம் வழங்கவும் -

பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி மற்றும் யாழ். கடல்நீரேரிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு 25 லட்சம் ரூபா செலவில் உடுபுடைவைகளை வழங்கவும் - ஏற்பாடு செய்வதாக குழுவினர் உறுதி வழங்கினர். (இ-7-73-173-10-109)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜுலை22

யாழ். பாலர் பாடசாலையின் 8 ஆவது வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வண்ணார்பண்ணை வள்ளுவன் சனசமூக நிலைய மைதானத்தில் தலைவர் செல்வி வளர்மதி கந்தையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலகத்தின் கணக்காளர் என்.இராசநாயகமும், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி ஜெ.இராசநாயகமும் கலந்துகொள்வர். (ஐ-10)

# சுகாதாரத் தொண்டர்களுக்கு பாலியல் சுகாதாரப் பயிற்சி

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பிரிவுகளில் சுகாதாரத் தொண்டர்களுக்கு பாலியல் சுகாதாரம் பற்றிய பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கோப்பாய்ச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.இந்திரராஜா தலைமையில் இடம்பெற்று வரும் இப்பயிற்சி நெறியில் 35க்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டுள்ளனர். இவர்களுக்கு சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் விரிவுரைகளை நடத்தி வருகின்றனர்.

இப்பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த பயிற்சியாளர்கள் கிராமங்களில் மக்களுக்கு பாலியல் சுகாதாரம் பற்றி ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்குவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

# தமிழ்த் தின போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜுலை22

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கான தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் 26 ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

முதலாம் நாள் போட்டிகள் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் இரண்டாம் நாள் போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகளுக்கென ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நடுவர்களை இப்போட்டிகளில் கடமையாற்றுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான அழைப்பிதழ்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த 18ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த மேற்படி போட்டிகள் பாடசாலை மாணவர்களது பகிஷ்கரிப்பினால் நடைபெறவில்லை என்பது தெரிந்ததே. (ஐ-10)

# கோப்பாயில் மூன்று பாடசாலைகள் இடம்பெயர்ந்து இயங்குகின்றன

கோப்பாய்க் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட மூன்று பாடசாலைகள் இயங்க முடியாமையினால் வேறு பாடசாலைகளில இயங்கி வருகின்றன.

இருபாலை தமிழ்க்கலவன் பாடசாலையும், கோப்பாய் கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலையும் தற்போது கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் இயங்கிவருகின்றன. வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் தற்போது புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் இயங்கிவருவதாகவும் கோப்பாய் கல்விக் கோட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 20ஆம், 21ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### சங்கானை

511/145374/A 513/142055/A
513/142055/B 513/142055/C
513/143834/A 513/143834/B
513/143834/C 513/143834/D
513/143834/E 513/144147/A
513/144147/B 513/144147/C
513/146436/A 513/146475/A
513/153439/A

### யாழ்ப்பாணம்

511/145684/A.

### கோப்பாய்

511/133944/A 511/133944/B
511/143314/A 511/143314/B
511/143314/C 511/143343/A
511/145207/A 511/145215/A
511/145227/A 511/145227/B
511/145227/C 511/145241/A
511/145268/A 511/145268/B
511/145268/C 511/145268/D
511/145268/E 511/145287/A
511/145402/A 511/145438/A
511/145438/B 511/146264/A
511/146264/B 511/146264/C
511/146264/D 511/146264/E
511/149006/A 511/149006/B
511/152791/A 511/152791/B
511/153112/A 511/153112/B
511/153112/C 511/153112/D
511/153112/E 511/153133/A
511/153133/B 511/153133/C
511/153510/A 511/153511/A
511/153521/A 511/153521/B
511/153521/C 511/153521/D
511/153521/E 511/153521/F
511/153524/A 511/153525/A

### நல்லூர்

511/145012/A 511/145065/A
511/145188/A 511/145188/B
511/145188/C 511/145264/A
511/145298/A 511/145298/B
511/145388/A 511/145404/A
511/145407/A 511/145655/A
513/143946/A 513/144143/A
513/144143/B 513/144143/C
513/146288/A 513/146288/B
513/147174/A 513/153212/A
513/153212/B 513/153316/A
513/153316/B

### சண்டிலிப்பாய்

513/142022/A 513/143958/A
513/143958/B 513/146282/A
513/146282/B 513/146282/C
513/146292/A 513/146292/B
513/146292/C 513/146964/A
513/148232/A 513/148232/B
513/153301/A 513/153321/A
513/153321/B 513/153322/A
513/153322/B 513/153322/C
513/153434/A

### தெல்லிப்பழை

513/144085/A 513/144085/B
513/144085/C 513/144189/A
513/153445/A

### உடுவில்

511/140945/A 511/145194/A
511/145243/A 511/145271/A
511/145271/B 511/145274/A
511/145403/A 511/145403/B
511/145435/A 511/145435/B
511/145435/C 511/145435/D
511/147640/A 511/147640/B
513/134513/A 513/138440/A
513/138440/B 513/142066/A
513/143789/A 513/143837/A
513/143837/B 513/143886/A
513/143886/B 513/143886/C
513/143886/D 513/148986/A
513/153217/A 513/153217/B
513/153364/A 513/153365/A
513/153384/A 513/153384/B
513/153384/C 513/153474/A
513/153474/B 513/153474/C
513/153474/D 513/153497/A
513/153497/B

### கோப்பாய்

511/136421/A 511/136421/B
511/136421/C 511/136421/D
511/143315/A 511/143326/A
511/143356/A 511/143356/B
511/143432/A 511/143432/B
511/143432/C 511/143432/D
511/146238/A 511/146239/A
511/146240/A 511/146240/B
511/146240/C 511/146240/D
511/146240/E 511/148981/A
511/149010/A 511/149023/A
511/149023/B 511/149028/A
511/149050/A 511/149050/B
511/149069/A 511/149069/B
511/149069/C 511/149112/A
511/149113/A 511/149113/B
511/149113/C 511/149113/D
511/149117/A 511/149117/B
511/149152/A 511/149152/B
511/149163/A 511/149163/B
511/149180/A 511/149184/A
511/149188/A 511/149188/B
511/149188/C 511/149188/D
511/149193/A 511/149193/B
511/149198/A 511/149198/B
511/149200/A 511/149200/B
511/149200/C 511/149200/D
511/149200/E 511/149200/F
511/153119/A 511/153120/A
511/153130/A 511/153130/B
511/153142/A 511/153147/A
511/153147/B 511/153147/C

# ஆஸ்பத்திரி ஊழியருக்கு மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம்,ஜுலை22

யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

டாக்டர்களுக்கு 5 லீற்றரும், தாதியருக்கு 3 லீற்றரும், சிற்றூழியர்களுக்கு 2 லீற்றரும் வழங்கப்பட்டு வருகிறது. (இ-139)

# அமைதியும் சமாதானமும் ஆண்டு இறுதியில் கிட்டும்

## முத்திரை வெளியீட்டு விழாவில் சென்.பற்றிக்ஸ் அதிபர் நம்பிக்கை

"இந்த இரண்டாயிரமாம் ஆண்டு யூபிலி வருடத்தின் இறுதியில் இங்கு அமைதியும் சமாதானமும் ஏற்படும் என்பது எமது நம்பிக்கை. அதுவே எமது எதிர்பார்ப்பும் பிரார்த்தனையும் ஆகும்."

இப்படி யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண. பிதா ஏ.ஜ.பேணார்ட் தெரிவித்தார்.

கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நினைவு முத்திரை வெளியீட்டு விழாவில் வரவேற்புரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கல்லூரியின் உப.அதிபர் ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதமவிருந்தினராக யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் கலந்துகொண்டார்.

வடக்கு - கிழக்கு மாகாணப் பிரதி அஞ்சல் அதிபர்நாயகம் ஏ.கே.சிவஞானசுந்தரம் விழாவில் கலந்துகொண்டு முத்திரையை வெளியிட்டு வைத்தார்.

கல்லூரி அதிபர் வண.பிதா ஏ.ஜ.பேணார்ட் தனது வரவேற்புரையில் மேலும் கூறியதாவது:-

குண்டுகளும்," வெடிச்சத்தங்களும், குமுறல்களும், பெருமூச்சும் ஒலிக்கும் இன்றைய சூழலில் எமது கல்லூரியின் விழாவை கோலாகலமாக நாம் எப்படிக் கொண்டாட முடியும்...?

இந்த யூபிலி வருடத்தின் இறுதியில் நாம் எதிர்பார்ப்பது போல் எமது கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவினை சிறப்பாகக் கொண்டாடுவோம். அப்போது இதற்கான சூழ்நிலை ஏற்படுமென்று நம்புகிறோம் - என்றார்.

யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் உரையாற்றும் போது கூறியதாவது:-

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் 150ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் இன்று லண்டன், கனடா, பாரிஸ் உட்பட வெளிநாடுகளிலுள்ள கல்லூரி மாணவர்களினால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

துரதிர்ஷ்டவசமாக இந்த நிகழ்வினை இங்கு சிறப்பாகக் கொண்டாட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு கல்லூரியின் சிறப்பம்சம் அதன் அதிபர், ஆசிரியர், மாணவர்களிலேயே தங்கியுள்ளது.

இன்று கொழும்பில் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு முத்திரை வெளியீட்டு விழா பழைய மாணவர் சங்கத்தினால் சிறப்பாக நடத்தப்படுகிறது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் வேறு ஒரு சூழலினால் சிறிய அளவிலே விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது - இப்படி அவர் கூறினார்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை உரையாற்றும் போது கூறியதாவது:-

புனித பத்திரிசியார் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவை அங்கீகரித்து நினைவு முத்திரையை அரசு வெளியிட்டுள்ளது. இதற்கு கல்விச் சமூகத்தின் சார்பிலே நன்றி தெரிவிக்கவேண்டும்.

யாழ்ப்பாணச் சமூகத்தினர் அனைவருமே இந்தக் கல்லூரியில் 150ஆவது ஆண்டு நிறைவை அங்கீகரித்துக் கொண்டாடவேண்டும். துன்பங்களின் மத்தியிலும் நடைபெறும் இந்த விழா கல்விச் சொத்தை நாம் ஒருபோதும் அழிய விடமாட்டோம் என்பதற்கு உதாரணமாகும் - என்றார்.

கல்லூரியின் பழைய மாணவர் எஸ்.எஸ்.மரியதாஸ், ஆசிரியர்கழகத் தலைவர் எஸ்.ஸ்ரனிஸ்லாஸ், மாணவர் தலைவர் ஜீ.ஆர். தேவராஜன் ஆகியோரும் உரையாற்றினர்.

நினைவு முத்திரையை பிரதி அஞ்சலதிபர் நாயகத்திடமிருந்து யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதீன ஆயர் வண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் உட்படப் பலர் பெற்றுக்கொண்டனர்.

நினைவு முத்திரையும் முதல் நாள் கடித உறையும் நேற்றுக் காலை கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டபோதும் முத்திரை மட்டுமே யாழ். தபாலகத்துக்கு வந்து சேர்ந்ததாகவும் -

அதனால் முத்திரை தற்காலிக கடித உறையில் ஒட்டப்பட்டு நேற்று இங்கு வெளியிடப்பட்டது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(உ-5-51)

### விளையாட்டு விழா

விக்கினேஸ்வரா பாலர் பாடசாலையின் 8ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை காலை 9.00 மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியா லயத்தில் தலைவர் திருமதி சி. சிவானந்தராணி தலைமையில் நடைபெறவுள்ளது.(இ-10)

### கொழும்புத்துறை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியூடாக பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்கும் - சடலத்தைக் கொழும்புக்கு அனுப்ப நீதிவான் அனுமதி வழங்கினார்.

இந்த விசாரணை தொடர்பான அறிக்கைகளை எதிர்வரும் 18ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி அவர் உத்தரவிட்டார்.

(இ-3-7-9-15-173)

### சட்டநடவடிக்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவை புலிகளின் கப்பல் போக்குவரத்துக்குப் பொறுப்பான உயர்மட்டத் தலைவரான ஞானக்கோன் சந்தித்தார்" என்று லேக்ஹவுஸ் நிறுவனப் பத்திரிகைகளிலும், ரூபவாஹினி தொலைக் காட்சிச் சேவையிலும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனைத் தொடர்ந்தே அவர் தமது சட்டத்தரணி மூலம் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

"நான் புலிகளின் ஆதரவாளன் அல்லன். புலிகளுக்காக ஆயுதக் கடத்தல் எதிலும் நான் ஈடுபடவில்லை. 82ஆம் ஆண்டுக்குப் பின்னர் கப்பல் முகவர் பதவியைப நான் வகிக்கவில்லை. பதவியில் இருந்து ஓய்வுபெற்று ஆஸ்திரேலியாவில் வசித்து வருகிறேன்.

"எனது செய்தியை மறுத்து மூன்பு கொடுத்த அளவு முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட வேண்டும்.

"அவ்வாறு செய்தி வெளியிடாவிட்டால் வழக்குத் தொடுப்பேன்" என்று அதில் தெரிவித்துள்ளார்.

(இ-3)

### வால் நட்சத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாஸ்திர பிரிவினர் தெரிவித்துள்ளனர். இந்த வால்நட்சத்திரம் இன்று பூமிக்கு அருகில் 5கோடி 60 லட்சம் கிலோமீற்றர் தூரத்துக்கு வருவதால் நாளையும் எதிர்வரும் 25 ஆம் திகதியும் இங்கு அது தெளிவாகத் தெரியும். (இ-4)

### இனிமேல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்துக்குப் பொறுப்பான உயர்மட்டத் தலைவர் எனச் சொல்லப்படும் சாள்ஸ் ஞானக்கோன் என்பவரைத் தாம் சந்தித்துப் பேசியதாக அரசு பரப்பிவரும் செய்தியில் எந்தவித உண்மையுமில்லை என்றும் -

இது விடயமாக கொழும்பில் உள்ள ஞானக்கோனின் மைத்துனி ஒருவர் இரகசியப் பொலீஸாரால் நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் -

ஞானக்கோனைத் தாம் சந்தித்ததாக வெளிவந்த செய்தி தொடர்பாகவே விசாரணைக்கு அழைத்துச் சென்றதாக பொலீஸார் அந்தப் பெண்ணிடம் தெரிவித்ததன் மூலம் அந்த விடயத்தை உண்மையாக்க அரசு முயல்வதாகவும் -

இவ்வாறு தம்மீது தேவையற்ற அபாண்டமான பொய்யான குற்றச்சாட்டைச் சுமத்தும் அரசுடன், இனிமேல் பேசுவதற்கு தாம் விரும்பவில்லை என்றும் - ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் தெரிவித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச்சென்றார் என நம்பிக்கையாகத் தெரியவந்தது. (அ-3)

### பருத்தித்துறை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டித்து இந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பாக வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் வி.எஸ். சொக்கலிங்கம் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார் எனவும் -

மூன்று தினங்களுக்குள் இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் படைத்தரப்பு உறுதியளித்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

பஸ் சேவை தடைப்பட்டிருந்த 3 மணிநேரமும் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சோதனை நிலையத்தில் பயணிகளை இறங்குமாறு கோரப்பட்டதாகவும் -

சில பயணிகள் இறங்காமல் பஸ்ஸில் இருந்ததாகவும் -

அவர்களை இறக்காத காரணத்தாலேயே சாரதியும், நடத்துநரும் தாக்குதலுக்கு உள்ளானதாகவும் - கூறப்பட்டது. (இ-7-15-109-118-173)

### தமிழ்க்கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், பி. செல்வராசா, பி.துரைராஜசிங்கம், மாவை சேனாதிராசா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

"தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்க்கக்கூடிய அடிப்படை அம்சங்கள் இல்லாத தீர்வுயோசனைகளை ஏற்கமுடியாது. இந்த விடயத்தில் கூட்டணி உறுதியாக, கவே உள்ளது" என்று கூட்டணிக் குழு தெரிவித்தது.

அதன் பின்னர் ஈ.பி.டி.பி., புளொட் தூதுக் குழுக்களை ஜனாதிபதி ஒன்றாகச் சந்தித்தார்.

ஈ.பி.டி.பி. சார்பில் அதன் செயலாளர்நாயகம் டக்ளஸ் தேவனந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராசா, ஆலோசகர் கலாநிதி விக்கினேஸ்வரன் ஆகியோரும் -

புளொட் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன், செயலாளர் எஸ்.சதானந்தன் ஆகியோரும் - கலந்துகொண்டனர்.

தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய மூன்று அம்சங்களையும் அரசமைப்பில் சேர்க்காதுவிட்டால் ஆதரவு வழங்க முடியாது என்று இரு கட்சிகளும் தெரிவித்தன.

தமிழ்க் கட்சிகளுக்கு அளித்த பதிலில் ஜனாதிபதி கூறியதாவது:-

"தமிழ்க்கட்சிகள் தெரிவித்த மூன்று அம்சங்களையும் அரசமைப்பில் சேர்க்கத் தயாராக இருக்கின்றேன். ஐ.தே.க. இந்த அம்சங்களை ஏற்றால் உடனடியாக அவற்றை அரசமைப்பில் இடம்பெறச் செய்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பேன்.

ஐ.தே.க. இணங்காவிட்டால் இந்த யோசனைகளை வேறு வடிவத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றத் தமிழ்கட்சிகள் ஆதரவு வழங்கவேண்டும்.

அவ்வாறு ஆதரவு தரும் பட்சத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றுவேன்" - என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐ.தே.கவுடன் பேசிய பின்னர் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் தமிழ்க்கட்சிகளுடன் மீண்டும் பேசவிருப்பதாகவும் ஜனாதிபதி அவர்களிடம் தெரிவித்தார்.

(இ-3)

இதில்

வையுங்கள்

விவரம் நாளைய உதயனில்

(76615)

# தென்மராட்சி வலய பணிப்பாளர் விளக்கம்

கடந்த வியாழக்கிழமை 'உதயன்' பத்திரிகையில் 5ஆம் பக்கத்தில் "இடம்பெயர்ந்த இடங்களில் கடமையாற்ற தென்மராட்சி ஆசிரியர்களுக்கு அனுமதி" என்ற தலைப்பில் வெளியான செய்தி குறித்து தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா விளக்கம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவுக்கும் தென்மராட்சி வலயப் பணிப்பாளருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் காணப்பட்ட இணக்கம் எனத் தெரிவித்து சில அம்சங்கள் வெளியாகியிருந்தன. அது குறித்தே வலயக் கல்விப் பணிப்பாளர் விளக்கம் அளித்துள்ளார். அவர் அதில் தெரிவித்துள்ளதாவது:-

மேற்படி செய்தி தொடர்பாக பின்வரும் விடயங்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவினர் என்னைச் சந்திக்கவில்லை.

அச்செய்தியில் குறிப்பிடப்பட்டபடி வழமையான முறையில் அதிபர்கள் ஊடாக சம்பளத்தை வழங்க வேண்டும் என்று கடந்த மாதம் 28ஆம் திகதி நடைபெற்ற அதிபர் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்பட்டது. இதற்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை.

ஆசிரியர்களது சுயவிவரக் கோவைகளை எடுத்துவருவதற்கான முயற்சியை மேற்கொள்ளும் அதேவேளை புதிய சம்பளத் திட்டத்துக்குள் உள்வாங்குவதற்கான படிவங்களை வழங்குவதெனவும் நாம் தீர்மானித்திருந்தோம். வலிகாம வலயத்தில் தென்மராட்சியைச் சேர்ந்த சுமார் 400 ஆசிரியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களது நலன்கருதி வாரத்தில் ஒரு நாள் இங்கு வருகைதருவதென நான் ஏலவே தீர்மானித்திருந்தேன். இடப்பெயர்வின்போது வடமராட்சியில் பல உடனடிப் பிரச்சினைகளை தீர்க்க வேண்டி இருந்தமையால் வலிகாம வலயத்துக்கு வருகை தருவதில் தடங்கல்கள் ஏற்பட்டன.

எமது அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் இடம்பெயர்ந்து அல்லற்படும்போது எமது வேதனையில் தொழிற்சங்கம் ஆதாயம் தேட முற்படுவது உகந்ததல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கெடுப்பு நடத்தாதிருத்தல், காணி அதிகாரத்தை பிராந்திய சபைகளுக்கு வழங்குதல் குறித்து ஐ.தே.கட்சியுடன் பேசி ஓர் இணக்கத்துக்கு வருவதற்கு முயற்சி செய்யலாம் என்றும் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இந்தப் பின்னணியிலேயே ஜனாதிபதி நேற்று தமிழ்க்கட்சிகளையும், ஐ.தே.கட்சியையும் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்புக்கள் மொத்தமாக ஒன்பதரை மணி நேரம் அலரி மாளிகையில் நடைபெற்றன.

ஜனாதிபதி சந்திரிகா முதலில் (மு.ப11.30மணிக்கு) தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழுவைச் சந்தித்துப் பேசினார்.

அதன் பின்னர் புளொட், ஈ.பி.டி.பி. கட்சிகளின் தூதுக்குழுக்களை ஒன்றாகச் சந்தித்துப் பேசினார்.

தாம் பிரஸ்தாபித்த மூன்று அம்சங்களும் திருத்தப்படாவிடில் தீர்வுத் திட்டத்தை நிராகரிப்பது என்ற முடிவில் மாற்றம் இல்லையென தமிழ்க்கட்சிகள் மூன்றும் ஜனாதிபதியிடம் தெரிவித்தன.

இந்த மூன்று அம்சங்கள் குறித்தும் ஐக்கிய தேசியக் கட்சி சம்மதித்தால் திருத்தங்களைச் செய்வதற்குத் தாம் தயார் என்று சந்திரிகா தமிழ்க்கட்சிகளிடம் உறுதியளித்தார்.

தொடர்ந்து ஐ.தே.கட்சி தூதுக்குழுவை ஜனாதிபதி சந்தித்தார். அப்போது தமிழ்க்கட்சிகளின் நிலைப்பாட்டை ரணில் விக்கிரமசிங்காவிடம் எடுத்துக்கூறினார். ஐ.தே.கவின் ஆதரவையும் கேட்டார். இதுவிடயமாக முத்தரப்புப் பேச்சு நடத்தி முடிவுக்கு வரலாம் என்றும் ஜனாதிபதி ஆலோசனை கூறினார்.

எனினும் மூன்று அம்சங்களையும் திருத்துவது குறித்து ஐ.தே.கவிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று அறியவந்தது.

தமிழ்க் கட்சிகளின் கோரிக்கை தொடப்பாக மகா சங்கத்துடன் ஆலோசனை நடத்தினால் என்ன என்ற சாரப்பட ஐ.தே.க. கருத்து வெளியிட்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

அரசு தரப்பு - ஐ.தே.க. சந்திப்பு மீண்டும் அனேகமாக இம்மாதம் 29ஆம் திகதி நடைபெறும் என்று மேலும் தெரியவந்தது. (அ-3)

### அதிபர்கள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை22

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஜி.சீ.ஈ உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் நடைபெறும்.

மேற்படி கருத்தரங்குக்கு சம்பந்தப்பட்ட அதிபர்களை சமுகமளிக்குமாறு தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

(க)

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

HERO HONDA - 4000 கி.மீ. மாத்திரம், சிறந்த நிலை. நன்கு பராமரிக்கப்பட்டது. முதல் உரிமையாளர்.

இ.தேவகுரு ஊறணி, வல்வெட்டித்துறை. (76458)

உ

அளவெட்டி வடக்கு
ஞான வைரவர் சனசமூக நிலைய
வளர்ச்சி நிதிக்காக

மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இளைப்பாறிய ஆசிரியர் பண்டிதர் நாகலிங்கம்
தலைமையில் இடம்பெறும்

இடம்: - கந்தரோடை மைதானம்
காலம்:- நாளை (23-07-2000) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு ஆரம்பமாகும்.
கட்டுப்பணம்:- 200 ரூபா

★ A, B, C என மூன்று பிரிவுகளாக காளைகள் பிரிக்கப்படும்.
கைக் கொடிச் சவாரியும் இடம்பெறும்.
(கட்டுப்பணம்: 50 ரூபா)
★ வெற்றியீட்டும் போட்டியாளர்களுக்குப் பெறுமதியான பரிசு வழங்கப்படும்.
★ மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவான தீர்ப்பாகும்.

பிரவேசம் ரூ. 10.00 - நிர்வாக சபையினர்

(76628)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிரைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-07-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.